Now let us turn to his vast ocean of poems of delightful beauty and picturesqueness, that is, Sursagar. The poet is indebted to Mahabaratha and Bhagavatha for they served as sources for his work. This literary work consists of poems telling us of Lord Krishna's pleasant days of boyhood, his life with the shepherd girls, his famous flute playing and his divine nature. The poems of Sursagar can be divided into five groups under the following titles.

1. Vinay — A state of request or prayer to God Krishna for the attainment of salvation; considering him as an "Avathar" of God.

2. Krishna's deeds of boyhood — In this group of poems a fine description of the various now famous, lovely and mischievous deeds of Krishna, the most beloved of all the children so far imagined, is given.

3. Description of Krishna's handsome figure. The beautiful external appearance of Krishna has been well painted in these poems.

4. The sweet flute playing — The enchanting, magical flute of Mohan is introduced to us. The influence of the melodious note produced by Krishna in the flute was very great upon the people of the whole town, especially the Gopikas and even the cows were attracted by it.

5 Bramar Gith — When Krishna left Gokhul for Mathra the shepherd girls who had unextinguishable love for Krishna, felt sorry and they were completely lost. At that time Uddhav, a messenger sent by Krishna being envious of Krishna's popularity and the whole hearted affection shown to him by every human being of the town, tries to advise them to worship the God who has no body, no character whatsoever who is beyond the powers of human perception, whom man cannot know. He told them that


it was improper to worship Krishna as a God, but he failed. Here a philosophical plot has been constructed by the poet. The girls criticized Uddhav and his unknown God. They were never prepared to give up the worship of Krishna Surdas is convinced that Krishna inspite of all his playful deeds is still an "Avathar" in flesh and blood and who has come to this mortal world solely for the purpose of saving his worshippers.

Surdas has described the flute or Murali of Krishna in the best way possible and in his poems he gives a profound meaning of that sweet sound of the flute produced by Mohan. The inflence of the flute upon the people of the town especially the Gopikas and the cattle is unbelievably great. They are taken to the heights of pleasure and delight when they listen to the flute of Krishna. It is divine in nature. The philosophy underlying the description of 'Murali-Maduri' is variously explained by critics. The sound produced by the flute is the First Sound Brahmam. Just like Brahmam is all pervading, the musical sound of the flute is also all pervading. In short the sound of the Murali is Almighty's supreme call. The poet says that the Murali of Krishna is even superior to God for, the pleasure which it affords to the people is even greater than the heavenly pleasure.

Surdas' imagination is indeed very noble and admirable. His Sursagar is a vast deep ocean of different sweet tastes. Love, paternal affection, humour, wonder and all such colours of human passion have been well painted in his three famous works, especially in Sursagar His poems clearly reveal to us his intelligence of a high order and his deep rooted love for God, his staunch belief in Bhakthi Marga and also his striking imaginative power. These are the best characteristics of the poet that make him and his poems immortal, never to be swept off the hearts of the readers. So it is very appropriate from every point of view of literary beauty this blind poet is hailed the "Milton of Hindi literature," and is placed in the foremost along with Thulasidas and Keshavadas.



Office bearers of the Union and other Associations.



விவேகாநந்தர்

ஓவியம் வரைந்தது
V. கணேசன், III. B. A.



Badminton Team: Winners, Madurai-Tiruchi Division for the Second time



Badminton Team with Principal. Runners-up in the University South Zone Matches





திருவள்ளுவர் விழா





மாணவியரின் நாடகக் காட்சிகள்





மாணவரின் நாடகம்

நகுமுல்லை

ம. வீ. பச்சையப்பன், பி. ஏ. (ஆனர்சு)

மண்ணில் உருவாகி — நாளும்
மெல்லப் பெரிதாகி
விண்ணைத் தழுவுமலர்க்—கொடியில்
விரிந்ததோர் வெண்முல்லை !

வானத் தெருமுனையில்—நின்று
வைரச் சுடர்உமிழும்
மீனச் சிரிப்புடனே—புவியில்
மீண்ட தொளிமுல்லை !

அழகுச் சிறுவடிவில்—நின்று
அன்பு வெறியூட்டும்
குழவிச் சிரிப்புடனே—மண்ணில்
குதித்தது நறுமுல்லை !

எழிலைச் சுவையாக்கி—எந்தன்
இதயங் கவர்ந்திடுவாள்
விழியின் ஒளிசுமந்தே—நிலவில்
விளைந்தது தேன்முல்லை !

பாடுங் குயிலினிமை—தன்
பொலிவிற் குடியேறக்
கூடுங் காற்றினிலே—குலவும்
அழகுக் கொடிமுல்லை !

கருகி உதிர்ந்திடினும்—இன்பக்
கவிதைக் குயிர்நல்கும்
பெருகு சுவைப்பாலின்—நிறம்
பருகிய மென்முல்லை !

கங்குல் துயில்வழியே—இரவில்
கனவுத் திரையூடே
எங்கும் நினைவாகி—மனக்
கண்ணில் நகுமுல்லை !

மின்னும் தெய்வம்

ஆ. கந்தசாமி, I பி. ஏ., வகுப்பு.

கொட்டுகின்ற செங்கதிரில் பொன்னைப் போலவே—எழில்
சொட்டுகின்ற நங்கைபோல மின்னும் பொன்னியே !

வட்டமான வெண்ணிலவில் வெள்ளி போலவே—மலர்
கொட்டுகின்ற நறுமணத்தை அள்ளி வருகுதே !

மின்னலிடை மேகவல்லி முத்தை உதிர்ப்பாள்—அதை
மின்னும்புனல் ஆரமாகப் பூண்டு வருகுதே !

செங்கரும்பு செழுங்கதலி செந்நெல் மஞ்சளும்—அவள்
அங்கமெலாம் தங்கிவளர்ந்து அமுதம் பொங்குதே !

மண்ணுலகில் பொன்னிபோல மின்னுந் தெய்வமே—யான்
கண்டதில்லை புகழ்ச்சியில்லை உண்மை யாகுமே !

அறிவு ஒளி

எம். முகமது காசிம், இளங்கலை முதல் வகுப்பு, (I.B.A. T/T)

மலைமேல் தவழ்ந்துலவும் மஞ்சின் கருநிறத்தில்
மாலைக் கதிரவனின் மஞ்சள் ஒளிப்பிழம்பில்
ஆழக் கடலலையின் அமுதூறுந் தேனிசையில்
ஆடியசைந்து வரும் அழகுதமிழ்த் தென்றலினில்
கண்சிமிட்டி ஒளிபரப்பும் கணக்கற்ற தாரகையில்
காரிருளை நீக்கவரும் கலைமதியின் தண்ணொளியில்
காதற் கவிபாடும் கருங்குயிலின் இன்னிசையில்
காவினிலே ஆடிவரும் கலாபத்தின் பேரழகில்
காற்றில் மிதந்துவரும் கலைமகளின் யாழிசையில்
சேற்றில் மலர்ந்துநிற்கும் செழுமரையின் செந்நிறத்தில்
அருமறை சொல்லிவரும் ஆழ்ந்த கருத்ததனில்
அருமைத் திருக்குறளின் அறிவொளியே கண்டேனே !

உலகம் பலவிதம்

By
K. கன்னையன், III B. Sc. [Chem.]

சிந்தனை செய்யாதே வீணாகத் தம்பி,
நிந்தனை செய்யாதே கண்ணீரைச் சிந்தி;
வந்தனம் சொன்னாலும் வையகம் தம்பி,
சிந்தனை செய்யாதுன் வாக்கினை நம்பி.

மெய்மையுன் வார்த்தைக்கு மேவாது சல்லி
பொய்மைக்குப் பொற்காசு தருவாரே அள்ளி;
மெய்மை என்றால்நகை யாடுவர் எள்ளி
நன்மை என்றாலவர் போடுவார் தள்ளி.

சிட்டாய்ப் பறந்துநீ சேவை செய்தாலும்
'பட்டாஉன் மேனி' தான் ? என்பா ரென்னாளும் ;
கொட்டாவி விட்டீவர் நேரத்தில் மேலும்
திட்டாதி ருந்தாலே அவர்க்கது சாலும்.

கன்னி மணக்குந் தமிழென்றால் போச்சு
கன்னத்தி லோரறை எங்குமே ஏச்சு ;
எண்ணத்தில் ஏக்கத்தில் எங்களின் மூச்சு
சொன்னத்தைப் போலென்பார் ஆங்கிலப் பேச்சு.

பாரினில் உள்ளங்கள் பலவகை தம்பி,
தேறினில் நெஞ்சந்தான் ஏங்குதே வெம்பி ;
நீரிற் குமிழியாம் வாழ்க்கையை நம்பி
நிற்போரை எண்ணில் கொதிக்குதே கும்பி.

இது கனவே!

ச. செல்வராசன், III B.A., IV B/E.

சிந்தை கலங்கி அன்றோர்நாள்
சிறுசுவர் ஓரம் சாய்ந்திருந்தேன்
முந்தை நினைவுகள் நெஞ்சத்தின்
முன்னே வந்து அலைமோத
தந்தை வரைந்த மடலதனைக்
கையிற் கொண்டு கண்ணயர்ந்தேன்
கந்தை வெண்ணுடை அணிந்தொருத்தி
கண்ணே மகனே எழுவென்றாள்.

யார்நீ தாயே இங்குவர
என்றேன் கண்ணீரவள் வடித்தாள்
சீர்உறு மகனே நான்தானுன்
சிறந்த தமிழ்த்தா யறிவாய்நீ
பாரோர் ஏத்த வாழ்ந்திருந்தேன்
பாவியரா லின்று பாங்கிழந்தேன்
ஏர்உறு குறளும் மேகலையும்
ஏனைய சீருடை நூற்களெலாம்

என்னிடம் அன்றே பிறந்தனதாம்
எங்கும் இன்று பரவினவே
அன்றே அறிவியல் கொண்டிருந்தேன்
ஆக்கக் கலைகள் பெற்றிருந்தேன்
என்றா லும்பிற மொழிவெறியில்
என்னை மறந்தார் என்னாட்டார்
எனவே என்சீரிழந்து விட்டேன்
என்னொளி தானும் மறைந்ததுவே;

மானங் கொண்ட மறச்செல்வா
மாற்றார்க் குன்சீர் உணர்த்துதற்கே
ஈன அழிவு கொடுஞ்செயலில்
என்றும் நினைவு செல்லாது
வான மளவு வளர்கலையும்
வற்றா அறிவியல் துறைகளையும்
பேணி வளர்த்தல் ஒன்றதுவே
பெற்ற மகன்செய் பணியென்பேன்.

எனவே மகனே விழித்தெழுவாய்
ஏறு போலே முன்னேறு
சொல்லால் பந்தல் போடாது
செயலில் எதையும் வெளிக்காட்டி
செம்மை ஆமோர் புத்துலகைச்
செய்து முடிப்பாய் என்றுரைத்தாள்
சிறிது கண்ணைத் திறந்திட்டேன்
சிரித்தேன் : கண்டன சிறுகனவே.

கற்புக்கரசி

வை. தியாகராசன், 3-ம் இளங்கலை வகுப்பு

கற்பெனும் சொல்லிற்கு முடிவானதும் தெளிவானதுமோர் விளக்கம் அளித்தல் அரிதே. இயற்கைப் படைப்பினுள் தலையாயதாய்க் கொள்ளப்படும் மனித இனம் பகுத்தறிவு மிக்குழி, தம்முள் ஒழுக்கமும் கட்டுப்பாடும் நல்லின்ப வாழ்வுக்கு இன்றியமையாதன என்று கொண்டொழுகி, இல்வாழ்வுக்கோர் இலக்கணமாய் ஏற்றுக் கொண்டதோர் உயர்தனிச் செந்நெறியே கற்பென்னும் நன்னெறியாம். இங்ஙனம் ஏற்பட்டதாகிய கற்பு பலநாடுகளிலும் வெவ்வேறு கொள்கையுடன் கொள்ளப்பட்டது.

தமிழ் மக்கள் மிகப்பழங் காலத்திருந்தே கற்பைப் போற்றி வாழ்ந்துள்ளனர் என்னும் உண்மையை நந்தமிழ் இலக்கியங்களும் பிற நூல்களும் அங்கைக் கனிபோல் தெளிவுறுத்தும். நம் தமிழர், கற்பென்பது 'பிறன் உள்ளம் புகாது நிற்கும்' உயர் வாழ்வென்று கொண்டொழுகினர். இத்தகைய நெறியினைத் தன் வாழ்வின் இலக்காய்க் கொண்டு நின்று புகழ்பெற்ற கண்ணகியின் கற்பின் தன்மையைக் காண்போம்.

தனி மணப்படுத்தப்பட்ட கோவலனும், கண்ணகியும் சிறந்த காதல் வாழ்வு வாழ்ந்தனர். இங்ஙனஞ் சில்லாண்டுகள் கழிய, கோவலன் மாதவி என்னும் கலையரசியின் ஆட்டங்கண்டு, அவளிடம் விடுதல் அறியா விருப்பம் கொண்டு, கண்ணகியை மறந்து அவளுடன் வாழ்வானாயினன்.

கற்பிலே மிகவுயர்ந்த படி பிறன் உள்ளம் புகாது வாழ்தலாம். இன்றைய நாகரிக உலகிலே மகளிர் மன்றத்தில் உறுப்பினராய் இருப்பதைப் பெண்ணுரிமையாகக் கொண்ட பெண்ணினத்தின் ஒரு பகுதிக்கு இக்கொள்கை எட்டுணையும் ஒவ்வாது. இவ்வுயர் நெறி நிற்க விழையும் ஒருத்தி அகத்தினுள் அடைபட்டுக் கிடந்தால்தான் இயலும். இவ்வுயர் நெறியைக் கண்ணகி பெற்றிருந்தாள் என்பதை

"வண்ணச் சீரடி மண்மகள் அறியாள்"

என்ற கவுந்தியடிகளின் கூற்று தெளிவுறுத்தும்.

கண்ணகியின் பார்ப்பனத் தோழியாகிய தேவந்தி கண்ணகியின் துயர்கண்டு இரங்கிக் கணவனைத் திரும்பப் பெறும் பொருட்டு அவளை

சோமகுண்டம், சூரியகுண்டம் என்னும் துறைகளில் மூழ்கிக் காமனை வழிபடுமாறு வேண்டுகின்ருள். அதுகேட்ட கண்ணகி தன் கற்பின் திண்மை விளங்க 'பீடு அன்று' என்று ஒரே சொல்லில் மறுக்கிருள். கண்ணகியின் கற்பு

"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை."

என்ற வள்ளுவர் வாய்மொழிக்குச் சான்ருய் அமைந்துள்ளமை உன்னத் தக்கது.

கண்ணகி இலக்குடன் வாழ்ந்தவள். தன் குறிக்கோளிற்கேற்ப வாழ்வினை அமைத்துக் கொண்டாள். அதன் பொருட்டு எதையுந் தாங்கும் இதயம் கொண்டிருந்தாள். அவள் கற்பின் அடிப்படையிலே கொண்டிருந்த கொள்கையைக்

"கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறூஉம்
பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல்."

என்னும் அவள் விஞவிஞலேயே நாம் உணரலாம்.

கணவனே தன் உயிர், உடல், பொருள், எல்லாம் என்று கொண்டவள் கண்ணகி. அவள் தனிமையில் வாடியபோதும், கணவன் உள்ளம் வருந்துமே என்றஞ்சி, அவனையும் பிறரையும் கண்டுழி இன் முகமும், புன்முறுவலும், பொய்நகையும் காட்டினள். குன்றனைய பெருஞ் செல்வத்தைக் கோவலன் மாதவியின் பொருட்டுத் தொலைத்து விடுகின்ருன். பின்னர் அவளைப் பிரிந்து கண்ணகியின்பால் வருகின்ருன். கண்ணகியும் அவன் நிலைகண்டுருகித் தன்பால் அவன் வந்துள்ளது பொருள் பெறும் நோக்குடனே என்று குறிப்பாய் உணர்கின்ருள். பின்னர் தன்பால் வேறெப் பெருஞ்செல்வமும் இன்மையால் 'சிலம்புள கொள்' என்று கூறுகின்ருள். அவன் அவளை மதுரைக்கு 'எழு' என்றவுடனே புறப்படுகின்ருள். இதனையேவாழ்த்துக் காதையில்

"கற்புக் கடம்பூண்டு காவலர் பின்போந்த
பொற்ருெடி நங்கை"

என்னும் சொற்களால் அடித்தோழி அவளை வாழ்த்துகின்ருள். மதுரைக்குச் செல்லும் வழியிலே மண்மகள் அறிந்திலா அவள் வண்ணச் சீரடிகள் சீர்குலைந்தும் தன் கணவன் துன்பங்கண்டே துயருறுகின்ருள்.

இதனைத்,

"தன் துயர் காணுத் தகைசால் பூங்கொடி"

என்ற கவுந்தியடிகள் கூற்று தெளிவுறுத்தும். மற்றும் அவளே தன் கணவனிடம்,

"யாவதும் மாற்ரு உள்ள வாழ்க்கையேன்"

என்று தன் கொள்கையினை உணர்த்துகின்ருள்.

இத்தகைக் கற்புடைய கண்ணகி, தன் குறிக்கோளுக்கு ஊறு செய்வோர்க்கும் கூட உள்ளத்தாலும் துன்பம் நினைத்தறியாள். கோவலன் அவளிடம் மாதவியைப் பலவாற்ருனும் இழித்துரைத்தபோது அவள் மாதவியை இகழாது நலங்கேழ் முறுவல் நகைமுகங்காட்டிச் 'சிலம்புள கொள்' என்ருள். கண்ணகியுற்ற துன்பங்குறித்துக் கோவலன் வருந்துகையில், "நும் முதுகுரவர் வருந்தும் வகையால் போற்ரு ஒழுக்கம் புரிந்தீர்", என்று கூறியமைவது அவளுடைய தன்னலமற்ற கற்பு வாழ்க்கையை விளக்குவதாகும்.

இங்ஙனம் பொறுமையுருவாய் வாழ்ந்த கண்ணகி தன் கணவன் பழி சுமத்தப்பட்டு கொலையுண்டான் எனக் கேட்கப் பொருளாய்ப் பொங்கி எழுந்தாள். யாரையும் இழித்துரையா அவள் நா 'அறனெனும் மடவோய்' என அறக்கடவுளையே பழிக்கின்றது

"மன்பதை அலர்தூற்ற மன்னவன் தவறிழைப்ப
அன்பனை இழந்தேன்யான்........"

என்று அலறுகின்ருள்.

"காய்கதிர்ச் செல்வனே கள்வனே என் கணவன்"

என்று முழுமுதற்கடவுளையே வினவுகின்ருள். அடிகள் முதல் ஆயர் ஈருக அனைவரையும் கவர்ந்த அவள் பொறுமைத் திருவுருவம்


"வம்பப் பெருந் தெய்வம் வந்ததிது வென்கொல்"

என்று மதுரை மாநகரே நடுக்குறும் வண்ணம் அமைகின்றது. மாதவி யையும் ஏசியறியா அவள் நா கோப்பெருந்தேவியை நோக்கி 'அரசோடு மதுரையையும் அழிப்பேன்', என்று சூளுரைக்கின்றது. கண்ணகி என்னும் பொறைத் தெய்வம் மதுரையையே அழிக்கும் அளவுக்குச் சீற்றம் கொண்டது. இப்புரட்சிக்குக் காரணந்தான் யாது? கணவனே எல்லாம் என்ற கொள்கையுடைய கண்ணகி அவனை இழந்தவிடத்து எல்லாம் இழந்தாள்; பழிவாங்கத் துணிந்தாள்; தன் கணவனுக்குற்ற பழியை எண்ணியெண்ணி உருகுகின்ருள்; ஓலமிட்டழுகின்ருள்; தன்

கண்வனுக்குற்ற பழியைப் போக்கிய பின்பே தான் இறக்க வேண்டு மென உளத்துட்கொண்டோளாய் மன்னனிடம் வழக்குரைக்கச் செல்கின்ருள்.

வழக்குரைக்கத் துணிந்தபின் கண்ணகி, வியக்குமளவிற்கு வீரம் கொள்கின்ருள். 'இறை முறை பிழைத்தோன் வாயிலோயே' என்று வாயிற் காவலனை விளிக்கின்றனள். பாராளும் வேந்தன் பாண்டியனைக் கண்டபின் அவள் சீற்றம் உச்சநிலையடைகின்றது. 'தேராமன்ன' எனவும் 'நற்றிறம் படராக் கொற்கை வேந்தே' எனவும் மறமிக்க சொற்களால் தன் சீற்றம் தோன்றுமாறு கூறி, அவன் செய்த குற்றத் தினையும் குறிப்பாய் உணர்த்துகின்ருள். அரசனும் தன் குற்றத்தை உணருகின்ருன். கோவலன் மாசு நீங்க, கண்ணகியின் கடமை முடிகின்றது.

அக் கற்புக்கரசிக்குக் கல்லெடுத்துச் சிலையமைத்தான் சேரன் செங்குட்டுவன். ஆடிவரும் காவிரியும் பாடிவரும் அவள் புகழை. இமய மலையின் எதிரொலியும் அவள் புகழே; இன்ருே சிலையில்லை; எதிரொலி கேட்கவில்லை; இதனை முன்கூட்டி யறிந்தே சிலப்பதிகாரம் செய்தார் இளங்கோ. சிலப்பதிகாரமென்ற சொல்லைக் கேட்டவளவிலே சிலம் பொலி கேட்கின்றது. கண்ணகியின் உரு கண்முன் தோன்றுகின்றது. கண்டு வணங்குகின்ருேம்; நாம் சிறந்து வாழ அவள் புகழ் பாடி, அவள் வழி நிற்போமாக.



இலக்கிய உலகில் இயற்கைத் தேர்வு

ச. இராஜவேலு, IV B. Sc. [Phy.]

மனிதனின் அழகுணர்ச்சியைத் தூண்டி அவனுக்கு இன்பம் பயக்கக் கூடிய ஆக்கச் செயல்களே கலை என அறிஞர் கூறுவர். இலக்கியமும் ஒரு கலையே. ஒரு புலவன் அல்லது அறிஞன் தனது உள்ளத்தில் ஊற்றெடுக்கக்கூடிய உணர்ச்சிப் பெருக்கிற்கு ஓர் உருவம் கொடுத்து அதை ஒரு சொல்லோவியமாக வெளியிடுவானேயானால் அது ஓர் இலக்கியமாகிறது. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன்தோன்றி மூத்த நம் தமிழில் அன்றுமுதல் இன்றுவரை தோன்றிய இலக்கியங்கள் எண்ணிறந்தவை. எனினும், அத்தனை இலக்கியங்களும் இன்றுவரை உயிரோடு வாழும் பேறு பெறவில்லை; வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெற்று, இயற்கையால் தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்கியங்கள் சிலவே. அறிஞர் சார்லஸ் டார்வின் உயிரினங்கள் பற்றிக் கூறிய 'வாழ்க்கைப் போராட்டமும் இயற்கைத் தேர்வும்' [The Struggle for Existence and Natural Selection] என்பது உயிரினங்களைப் பற்றி மட்டும் அமையவில்லை; இலக்கிய உலகிற்கும் - குறிப்பாகத் தமிழிலக்கிய உலகிற்கும் அது பொருந்துகிறது.

சங்க கால இலக்கியங்களாக நாம் இன்று காணக்கிடைக்கும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு ஆகிய நூல்கள் தவிர எரியுண்டவையும், புதையுண்டவையும், நீருண்டவையுமாய நூல்கள் எத்தனையோ? மேற்கண்ட நூல்கள் இன்றும் விளங்கக் காரணங்கள் பல உள. பற்பல தனிப் பாடல்களையும் பிரிவுபடுத்தி, அவைகளைத் தொகுத்தோரும், தொகுப்புவித்தோரும் நாம் என்றும் போற்றற்குரியர். ஒரு குழந்தையின் விளையாட்டுச் சாமான்கள் தனித்தனியாக இருப்பதை விட ஒன்றுசேர்ந்து ஒரு பெட்டியில் இருப்பதால் அவை தொலையாமை போன்று, தனிப்பாடல்களும் ஒன்று சேர்க்கப்பட்டு இன்று இயைந்த வாழ்வு நடாத்துகின்றன. ஆனால் இத்தொகை நூற்களில் சேராத எத்தனையோ தனிப்பாடல்கள் இறந்துபட்டிருக்க வேண்டும். எனவே புலவர்கள் தங்கள் உணர்ச்சிகளைப் பற்பல தனிப்பாடல்களில் வெளியிடுவதற்கு மாறாக, சங்க காலத்திற்கு அடுத்துள்ள காலத்தில், நெடும் பாடல்களைக் கருவியாகக் கொண்டனர்.

இத்துறையில் இளங்கோவடிகளும் சாத்தனாருமே முன்னோடிகளாக இருந்திருக்க வேண்டும். எளிய இனிய ஆசிரியப்பாக்களில் உயர்ந்த எண்ணங்களைப் பொதிந்ததன் மூலம் கண்ணகியின் ஆற்றலையும், மணிமேகலையின் தூய்மையையும், பௌத்த சமயத்தின் கொள்கை

களையும் இவர்களால் உலகினர்க்குணர்த்த முடிந்தது. இயற்கை வருணனை, நாட்டுச் சிறப்பு, மக்கள் வாழ்வு முதலியவை இத்தொடர்ச் செய்யுட்களில் பரவி விளங்குவதால், அவ்வத்துறையில் ஆர்வம் கொண்டோரால் இவை பாதுகாக்கப்பட்டுள்ளன.

பிற்காலத் தமிழர் சமயத்தையும் தங்கள் வாழ்வின் பகுதியாகக் கொண்டகாலைத் தமிழும் சமயங்களும் ஒன்றிற்கொன்று உதவி வாழ்ந்தன. தேவாரம், திருவாசகம் போன்ற நூல்கள் தோன்றின. "சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக" என்ற நிலை வளரலாயிற்று இக்காலத்திலும் சமயவெறியை வளர்க்கும் சில நூல்கள் தோன்றி, சமயப்பூசல்களை வளர்த்தன. அவை தோன்றிய காலத்தில் அவை போற்றப்பட்டாலும், சமயப்பொதுநோக்கு உடைய நூல்களோடு போட்டியிடமுடியாமல் இறந்து வீழ்ந்தன. அடுத்து வந்த காலத்தில் தமிழகம் அன்னியருக்கு அடிமைப்பட்டதால் இலக்கிய உலகை ஓரிருள் கவ்வியது. பழம்பெரும் நூல்கள் இருந்த இடம் தெரியவில்லை. இருந்தாலும் நன்றியுள்ள நெஞ்சங்கள் நற்றமிழ்நாட்டில் முற்றும் அற்றுவிடவில்லை. ஆதலால் உயரிய நூல்களெல்லாம் கற்றறிந்த ஒருசிலரால் போற்றப்பட்டு வந்தன. அச்சு எந்திரம் வந்தது இருளிலிருந்த தமிழ் நூல்களின்மீது ஒளிவீசிற்று. ஒளியைக் காணக் கூசிய கண்கள் பல என்றாலும் தமிழ் இலக்கியங்கள் புதுவாழ்வு பெறத் தொடங்கி விட்டதை யாராலும் தடுக்கமுடியவில்லை. நாட்டுப்பற்று வளர வளர மொழிப்பற்றும் வளரத் தொடங்கியது.

இன்று தமிழிலக்கிய உலகம் நாளுக்குநாள் வளருகிறது. இவ் வளர்ச்சியை யாராலும் தடுக்கவும் முடியாது. உயர்ந்த நூல்கள் பல தோன்றுகின்றன; அதே நேரத்தில் உணர்ச்சியைத் தூண்டக்கூடிய ஆரவாரம் மிகுந்த பல மட்டநூல்களும் தோன்றுகின்றன; உயர்ந்த நூல்களைவிட அதிக விற்பனையும் ஆகின்றன. என்றாலும் இந்நூல்களின் வாழ்க்கை "செம்புற்றீயல் போல ஒருபகல் வாழ்க்கையே". அறிஞர்கள் விரும்புவது காண்டொறும், பேசுந்தொறும், நினையுந்தொறும் நெஞ்சில் உவகையூட்டக்கூடிய நூல்கள். ஆனால் பொதுமக்கள் விரும்புவது கண்டதும், கேட்டதும் போதையூட்டக்கூடிய நூல்கள். இரண்டும் இரு துருவங்கள். இரண்டிற்கும் இலக்கிய உலகில் இடம் உண்டு என்றாலும் முன்னதுதான் பிந்தியதன்மீது வெற்றி அடைகிறது. அதனாற்றான் 'உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே' என்று வழக்கில் வந்தது போலும். உயர்ந்த கருத்தை எளிய பாடல்களில் அடக்கிய திருக்குறள் போன்ற நூல்கள் எக்காலத்தும் ஒளிவீசித்திகழ, பல மட்டநூல்கள் தொடக்கத்தில் அதிக விற்பனையானாலும் அடுத்த ஆண்டே வாங்குவா ரற்று வீழ்கின்றன. ஏனெனில் அந் நூல்களை வாங்கிய மக்களின் கவனம்

வேறுமட்டமான நூல்களின்பால் திருப்பப்படுகிறது. ஆனால், சிலப்பதிகாரத்தையும், திருக்குறளையுமே மதிக்கும் ஓர் உயர்ந்த உள்ளம் அதனின்று மாறாத பற்றுக்கொண்டுவிட்டது. உயர்ந்த கலைஞர்கள் தாய் போன்று எளிய சத்து மிகுந்த இலக்கிய உணவு படைத்தாலும், குழந்தைகள் போன்று பொதுமக்கள் சுவைமிகுந்து தோன்றுகின்ற விலைமிகுந்த பலகாரக்கடை இனிப்பு இலக்கியங்களையே விரும்புகின்றனர். குழந்தைகள் வளர வளரப் பலகாரக்கடை இனிப்பின் தன்மை உணர்ந்து, தாயின் உணவை மதிப்பதுபோல், பொதுமக்கள் மாறுங்கால் போலி இலக்கியங்கள் மறைகின்றன. எனவே, உயர் இலக்கியங்கள் வாழ்வு பெறுகின்றன.

துணிக்கடையில் காணக்கூடிய உயர்ந்த ஆடைகள் நல்ல நிறமும் பளபளப்பும் பெற்றிருக்குமானால் அதிகம் விலையாவதைப் போன்று, நல்ல கருத்துக்களைக்கொண்ட பாட்டுகள் நல்ல ஒலியமைப்பும் பெற்றிருத்தல் வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றியடைய ஒரு வழி சங்க நூல்கள் பெரும்பாலும் ஆசிரியப் பாக்களாக அமைய இடைக்கால நூல்கள் விருத்தம் முதலிய பலவகையாக அமைந்தது இக்காரணம் பற்றியேயாம். சிறந்த கருத்து இல்லாவிட்டாலும் ஓசைநயம் பொருந்திய சில சினிமாப் பாட்டுக்கள் வாழ்வு பெறுவதும் இதனாலேயே. ஆனால் ஓசைநயத்தோடும், இலக்கணவரன்முறை தவறாமலும் இயற்றப்படும் பாட்டுக்கள் வாழும் என்பது பொருள் அன்று; கருத்தோடு இவையும் பொருந்தி இருக்க வேண்டும் என்பதே பொருள்.

எனவே மேற்கண்ட முறையில் இயற்றப்படும் இலக்கியங்கள் இயற்கைத் தேர்வில் வெற்றியடையும் என அறிஞர் கூறுவர். என்றாலும், உயர்ந்த இலக்கியங்கள் உடனடியாகப் பொதுமக்களால் யாண்டும் போற்றப்பட்டதில்லை. "உயர்கலை நிகழ்காலத்தைவிட எதிர்காலத்திற்கு உரியதாக விளங்குகிறது. அதில் புலப்படுத்தப்பெறும் அனுபவம், பெரும்பாலோர் கண்டு, கேட்டு, உற்று, உணர்ந்து, வாழும் அனுபவத்தைவிட உயர்ந்ததாக உள்ளது. அதனால் பொதுமக்களுக்கு உயர்கலையின்பால் வெறுப்புத் தோன்றுகிறது." என்று அறிஞர் ஜோட் [C. E. M. Joad] கூறுகிறார். "கலைச்சுவை என்பது இயற்கையாக எளிதில் வருவது அன்று; நெடுங்காலம் பாடுபட்டு அடைய வேண்டிய ஒன்று அது. ஓவியம் ஆயினும், காவியம் ஆயினும், மட்ட வகையான கலையே இயற்கையாக இன்பமூட்டுவதாகக் கூறலாம்" என்று ஜோஷுவா ரெய்னல்ட்ஸ் [Sir Joshu Reynolds] என்பவர் கூறுகிறார். ஆதலால் உயர்ந்த நூலை உணர்ந்து படிக்க வேண்டுமானால் படிப்போரின் உள்ளமும் ஓரளவு உயரவேண்டியுள்ளது. உயர்ந்த உள்ளங்கள், வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெற்ற இலக்கியங்களைப் பயிலுங்கால், இன்னும் உயர்த்தப் பெறுகின்றன.

இலக்கிய இன்பம்

வே. சீனிவாசன்,

மூன்றும் இளங்கலை வகுப்பு, (கணிதப் பிரிவு)

அழகான ஓவியம். அதைக் காணுந்தோறும் களிப்படைகின்றது மனம். இனிமையான இசை. அதனைக் கேட்குந்தோறும் உவகை அடைகின்றது உள்ளம். ஐம்புலன்களின் இன்பத்தைவிட அறிவின் இன்பம் சிறந்தது. நீடு நிற்பது என்பது அறிஞர் கருத்து. இலக்கிய இன்பமும் அறிவின் இன்பத்தைப் போன்றதொன்றே.

உணவும், உடற்பயிற்சியும் உடலுக்கெவ்வாறு இன்றியமையாததோ அதைப்போன்று உணர்வும், கூர்ந்துநோக்கும் உள்ளமும் இலக்கிய இன்பத்திற்கு வேண்டற்பாலன. காவியத்தை உலகிற்கு நல்கிய கவிஞனின் உள்ளத்தைக் கற்பவரும் காண விழையவேண்டும். அன்னையில்லாக்குழந்தை மாற்றுந்தாயிடம் வளருகின்றது. அன்னையின் அன்பு மாற்றுந்தாய்க்கு வருவதருமையே. அவ்வாறே நமக்கு இலக்கியத்தை நல்கிய அப்பெருமக்கள் இன்று நம்மிடையேயில்லை. ஆயினும் குழந்தையின் அன்பைப் பெறுவது மாற்றுந்தாயின் கடமைபோன்று, அவ்வறிஞர்களின் கற்பனையைக்காண முயல்வதே நம் கடமை. அதுவே காவியம் கற்பதால், இலக்கியம் படிப்பதால் உண்டாகும் பயனும். இனி இலக்கிய இன்பத்திலே திளைப்போம்.

இரவியும், மதியும், இத்தரணியும் உள்ளவரை உளதாம் இயல்புடையது, வள்ளுவர் எனும் அத்தமிழர் அன்றுகண்ட திருக்குறள் என்ற இலக்கியம். 2500-ஆண்டுகளாயினும் நாம் அதனைப் படிக்குந்தோறும் படிக்குந்தோறும், ஈடில்லா உவகை பெறுகின்றோம். புறத்துறையும், அகத்துறையும் ஒன்றரக்கலந்து நிற்கும் ஒப்புயர்வற்றத் தனித்தமிழ்க் காப்பியம் குறள்.

வன்பாலையிலே, இலை, பூ, காய், கனிகளையிழந்து நிற்கின்றது ஒருமரம். அன்பிலா ஒருவன் இல்லறம் நடத்துகின்றான். இவ்விரண்டையும் கண்டார் வள்ளுவர். அன்பிலா அம்மனிதனின் இல்லற வாழ்க்கையை உணர்ந்து, பலரால் இகழப்படுவதைக்கண்டு தான்கண்ட அத்தருவையும், அம்மனிதனின் இல்வாழ்க்கையையும் ஒப்பிட்டு,

" அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று " —

எனக் குறள் பாடினார். இவ்வோரடிவுவமையை உள்ளத்தால் உணரும்பொழுது உவகை பிறக்கின்றதல்லவா ?

பொருள் தேடிச்சென்ற தன் தலைவனைப் பிரிந்து, அவன் பிரிவாற்றுமையான் புலம்பி வருந்துகின்றுள் இளம்மனைவி. அதனை நோக்குற்ற அவள் தோழி அவளைநோக்கி "உனக்கு எப்பொழுதும் தலைவன் நினைவுதானே? நாணமாக இல்லையா"? எனப்பரிகசிக்கின்றுள். இதற்குத் தலைவி கூறும்விடை நம் மனதை உருக்கிவிடுகின்றது. "ஊற்று நீரை வற்றவைக்கும்படி இறைக்க இறைக்க, அதுநில்லாது மேலும் மேலும் ஊறுவது போன்று என் வேட்கையும் அடங்காது நின்றதே! யாதுசெய்வேன்" – என்றுள் தலைவி.

இதனைக் குறளாசிரியர்,

"மறைப்பேன்மன் யான்இஃதோ நோயை இறைப்பவர்க்கு
ஊற்றுநீர்போல மிகும்" — எனக் குறிப்பிடுகின்றுர். தனித் தமிழிலக்கியமாம் குறளின் இலக்கிய இன்பத்திற்கு இதனைவிட வேறென்ன சான்று வேண்டும்?

தமிழுக்குக் 'கதி' என்பன கம்பரின் இராமாயணமும், திருக்குறளும். திருக்குறளைப் போன்றே இராமாயணத்திலும் கவிஞரின் நயத்தை எளிதிலுணரலாம். இயற்கை வருணனையிலே கம்பர் நிகரற்றவர். இயற்கையின் பேராற்றலை நினைந்து, நினைந்து பேருவகையடைவதே கம்பரின் தனிச்சிறப்பு. இதோ அவரது கற்பனையிலே மிளிர்ந்த கோசலை நாட்டின் வளப்பமுடைய கார்காலவயலினைக் காண்போம்.

"சேலுண்ட வொண்கணரிற்றிரிகின்ற செங்காலன்னம்
மாலுண்ட நளினப்பள்ளி வளர்த்திய மழலைப்பிள்ளை
காலுண்ட சேற்றுமேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத்தேரை தாலாட்டும் பண்ணை."

— கம்பரின் உள்ளத்திலே உருண்டோடியக் கவித்திறன்தான் என்னே! வயலில் நடவுநடும் பெண்களின் அழகிய நடையைப்போல் நடைபயிலும் செங்காலன்னத்தின் குஞ்சுக்கு எருமை பால் சொரிதலையும், தவளை இசையூட்டுதலையும் நோக்குமிடத்து அக்கோசல நாட்டின் வளப்பாட்டினை உணரலாம். இவ்வாறு கல்லாரும் கற்றவரும், காணுரும் கண்டவரும் இன்புறும்படி வரைவது தமிழ்க் கவிஞரின் தனிப்பண்பன்றே!

தமிழ்ப் பெருங்காப்பியமாகிய இப்பெருநூலிலே இன்பச்சுவை மிருந்தது சீதாகல்யாணம். தமிழ்ப் பண்புக்கேற்ப அஃது ஓர்காதல் மணமாகவேச் சித்தரிக்கப்படுகின்றது. கம்பர், இராமன், சீதை இவர்களின் காதல் காட்சியை வருணிப்பதைக் காணுந்தோறும் காணுந்தோறும் நம் உள்ளத்திலே உவகை பிறக்கின்றது. காதலுற்ற இருவர் தாம்கண்ட இன்பக்காட்சியை உள்ளத்தில் அழகொழுக எழுதி மகிழ்ந்து மதிமயங்குதலை மிகைபட வருணிக்கின்றுர் கம்பர்.

"பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணித்து
ஒருவரையொருவர் தம்உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்" —

எனக்காதலின் செய்கையை உணர்த்துகின்றார் தமிழ்ப் பெரியார். இதனை உணர்ந்துதான் நம்மிடையே வாழ்ந்த பாரதியும்,

"கல்வி சிறந்த தமிழ்நாடு — புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ் நாடு" —

எனப்பாடினார் போலும்!

முற்காலத் தமிழகத்தின் சீர்மையை விளக்குவதும், முத்தமிழின் பெருமையை முழக்குவதுமாகிய சிறந்த கலைச்செல்வம் சிலப்பதிகாரம். இச்சிலம்புச் செல்வத்தை நல்கிய செஞ்சொற்கவிஞர் இளங்கோவடிகள், தவச்செல்வமும், தமிழ்ச்செல்வமும் ஒருங்கே பெற்றவர். இத்தமிழ்ப் பெருமகனாரின் உள்ளத்திலே உதித்த அப்பெருநூலினைப் படிக்கும் எத்தமிழ்மகனும் இலக்கிய இன்பத்தில் திளைக்காமலிருக்க முடியாது. மாலைப்பொழுதினை வருணிக்கின்றார் புலவர். அந்திமாலை வந்தபொழுது கோவலனோடிருந்த மாதவியடைந்த இன்பத்தையும், அவனைப்பிரிந்த கண்ணகியடைந்த துன்பத்தையும் செவ்வனே வருணிக்கின்றார் கவிஞர்.

"கூடினார்பால் நிழலாய்க் கூடார்பால் வெய்யதாய்க் காவலன் வெண்குடைபோல் காட்டிற்றே — கூடிய மாதவிக்கும் கண்ணகிக்கும் வானூர் மதிவிரிந்து போதவிழ்க்கும் கங்குற்பொழுது" — இவ்வாறு வெண்ணிலவின் ஒளிவிரிந்து, போதாகநின்ற பூக்களின் கட்டவிழ்த்து இதழ்விரிக்கும் அந்திப்பொழுது! ஆகா! இதனைப்போன்று இலக்கிய இன்பம் சொட்டும் பாக்கள் எத்துணை எத்துணையோ; இதனையெல்லாம் நன்குணர்ந்துதான்,

"யாமறிந்த புலவரிலே
கம்பனைப்போல், வள்ளுவர்போல்,
இளங்கோவைப்போல்;
...யாங்காணுமே பிறந்ததில்லை" — என்றார் நம்கால கவிஞர்.

கவிஞன் இல்லத்திலே உண்ண உணவில்லை. கவிஞனின் பால்மணம் மாறாப் பாலகன் பசியாலழுகிறான். அதனைக் காணுற்றாள் தலைவி. மிக்க வருத்தமடைகின்றாள். பசியால் மெலிந்து வாடியவளாதலின் மார்பிலே பாலில்லை. தாயிடம் பாலினைப் பெறாத அச்சிறுவன் இல்லத்தினுட்சென்று ஒவ்வொரு பானைகளாகப் பார்க்கின்றான். எல்லாம் வறியனவாக யிருப்பதைக்கண்டு, பசித்துன்பத்தால் கதறியழுகின்றான். அதனைக்கண்ட தாய், புலிவருகின்றது என்று அச்சுறுத்தியும் பயன்காணாது, உந்தையை வெறுத்த உன்முகத்தைக் காட்டு எனத் தேற்றுகின்றாள். இவ்வறுமை நிலையை,

"இல் உணாத்துறத்தலின் இல் மறந்துறையும்
புல்லுளைக் குடுமிப்புதல்வன், பண்மாண்
பாலில் வறுமுலை சுவைத்தனன் பெருஅன்
கூழும் சோறும் கடைஇ ஊழின்
உள்ளில் வறுங்கலம் திறந்து அழக்கண்டு
மறப்புலியுரைத்தும் மதியங்காட்டியும்
நொந்தனன் ஆகி, நுந்தையை உள்ளிப்
பொடிந்த நின்செவ்விக்காட்டு எனப்பலவும்
வினவல் ஆனளாகி நனவின்
அல்லல் உழப்போள்" — என்ற புறப்பாட்டு சித்தரிக்கின்றது.

இதனைச் சிந்திக்கும்போது புறத்தின் அழகைப் புகழ்வதா அல்லது புலவரின் வறுமை நிலைக்கு இரங்குவதா என்ற எண்ணம் நம்மனதிலே எழுகின்றது. எனவே இலக்கிய இன்பமடைகின்றோம்.

ஆங்கிலத்திலே ஷெல்லியின் மேல்காற்று வருணனையைச் சிறப்பாகக் குறிப்பர். ஆனால் நம்தாய்மொழியிலுள்ள ஓர் இளவேனிற்கால வருணனை அதனைவிடச் சிறப்புடையதாகவே தோன்றுகிறது. இளம்வேனிலை ஓரிளம் பாவைக்குவமையாக்கி, தான் கானகத்திலே கண்ட முல்லையரும்பை அப்பாவையின் பற்களாக்கி, குவளைமலரை கண்களாக்கி, மாந்தளிரை உடலுக்கொப்பிட்டு, கிளியின் குதலைச் சொல்லையும், வண்டின் ரீங்காரத்தையும் அப்பாவையின் இன்சொல்லாக்குகின்றான் அப்பாவலன். இதோ அவன் நல்கிய இளவேனில்:

"கள்ளுயிர்த் தலருமுல்லைக் கடிமுகை முறுவரோன்ற
வள்ளிதழ்க் குவளையுண்கண் மலர்நறு பாந்தளிர் மென்கையாக்
கிள்ளைமென்குதலைச் சாற்றிக் கிளரொலி வண்டுபாணத்
தெள்விளி பாடவேனிற் றிருமகள் சிறந்தாளன்றே" (நைடதம்)

இவ்விளவேனிலை நினைக்குந்தோறும் இன்பமுண்டாகின்றதல்லவா ?

இவ்வாறு தமிழ் இலக்கியத்தினைக் காணுந்தோறும், படிக்குந்தோறும், நினைக்குந்தோறும் இன்பமுண்டாகின்றது. தாயுமானவரின் தணியா பக்தி வேட்கையும், மணிமேகலையின் துறவும், சிந்தாமணியில் அறநெறி திறம்பாத வேலுழவன் செய்கையும், செயங்கொண்டாரின் கலிங்கப்போர் வருணனையும், பாரதியின் தமிழ்ப் பண்பும் — என்றும் இன்பம் பயக்கின்றதல்லவா? இவற்றையெல்லாம் உள்ளுங்கால் யார்தான் இன்பமடையார்?

இலக்கியம் படிப்பது அதிலுள்ள இன்பத்தினை நுகருவதற்கு மட்டுமன்று. வாழ்நாளில் மறக்கமுடியாத துணை, இலக்கியமே. மனச்சான்றைப் பண்படுத்தி, வழுக்கிவிழுந்தபோதெல்லாம் இடித்துக்கூறித் திருத்துவதும் இலக்கியமே. உணர்ச்சிக்குப் புலவர்தரும் வடிவம் இலக்கியம். அஃது வளர்ச்சியுடையது; வாழ்வுடையது. அத்தகைய இலக்கியம் ஒளிபெற வேண்டுமாயின், நாம் அதனை நன்கு ஆய்தல் வேண்டும். அதனை நன்காய்ந்தறிந்து, இன்பமடைந்து, அதன்வழி நடப்பதே தமிழ்ப் பெருமக்களாகிய நமது தலையாய கடனும்.

"கற்க கசடறக் கற்பவை — கற்றபின் ; நிற்க அதற்குத் தக"—குறள்.

வள்ளுவர் வாழ்க்கை நெறி

ரா. வெங்கடநாராயணன், III B.A., I b/t

மக்களிடை பெயர்பெற்ற நூல்களில் என்றும் மதிக்கப்பெறும் நூலாகத் திருக்குறள் விளங்குவதற்குக் காரணம் அதில் மற்றெந்த இலக்கியக் கதிர்களில் காணக்கூடிய மனித எண்ணமும், செயலும் எட்டமுடியாத அற்புதங்களைப் பற்றிய எவ்விதக்குறிப்பும் இல்லாமல் இருப்பதுதான். வாய்மையெனும் பண்பை அடிப்படையாகக் கொண்டு எழுந்த நூலே குறள்.

வாய்மை என்னும் பண்பை 'உண்மை' என்னும் பொருளில் எடுத்துக் கொண்டால் அது மக்களிடைச் சிறந்து விளங்கும் வாய்ப்புக் குறையும் என்பதை உணர்ந்த வள்ளுவர் வாய்மைக்கு இலக்கணம் கூறுகிறார் :

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

பிறருக்குத் தீமை செய்யாத வகையில் நன்மை பயக்கக்கூடிய பொய்யும் 'வாய்மையிடத்த' என்கிறார்.

வள்ளுவர் தம் நூலில், அறத்தைக்கொண்டு பொருளீட்டி இன்ப வாழ்க்கை வாழ வழிகாட்டுவதால், அவர்கூறும் மக்கட்பண்புகளின் விளக்கங்களில் பிறருக்குத் 'தீமை செய்யாமை' என்னும் ஒரு கண்டிப்பு இருப்பதைக் காணலாம். 'நீயும் வாழ்; பிறரையும் வாழவிடு' என்ற வள்ளுவரின் பெருவுள்ளம் பாராட்டத்தக்கதே !

வள்ளுவர் பெரிதும் மக்களிடம் விரும்பும் பண்பு 'ஒப்புரவு' என்னும் பண்பே. ஆயின் மக்கள் உள்ளப்பாங்கை அறிந்தவர் அவர் ஆதலின் அக்கொடையாளரின் தரத்தையும் பாகுபாடு செய்திருக்கிறார். அவரது திறம் கண்டு நாம் வியக்கிறோம்.

முதலாவதாகப் பேரறிவாளரைக் காணலாம். வள்ளுவர் 'பேரறிவாளரது' செல்வத்தை 'ஊருணி நீர் நிறைந்தற்று' என்கிறார். (குன்றக்குடி அடிகளார், இக்குறளைப்பற்றிப் பேசும்போது பரிமேலழகர் கூறும் விளக்கம் வள்ளுவர் தம் உள்ளத்துக்கொண்ட கருத்தினின்றும் மாறுபட்டது என்று குறிப்பிட்டார். மேலும் விளக்குகையில் 'ஊருணி தான் பிறர்க்கு நீர் உதவும்போது தன்னை மறந்து, பின்வரும் பயன் நோக்காது, உதவுவதில்லை; மக்கள் நீர் எடுக்காமல் இருப்பின் காலப்போக்கிலே, ஊருணி தூசு படர்ந்து, ஊற்றுவளம் குறைந்து, தூர்ந்து போய்விடும். அதனால் அதன் சிறப்பு மங்கும். எனவே ஊருணி செய்யும் உதவியின்

பின்னே சுயநலம் இருக்கிறது;' என்றார்). பின்வரும் பயன்நோக்கி உதவி செய்வாரை நெஞ்சில்வைத்துக் கூறியதே இது.

இரண்டாவதாகத் தன்னைப்பற்றிக் கவலையும் இன்றி, தன்னை மறந்தும், பெறுவார் நிலைமறந்தும் யாவருக்கும் கொடுக்கும் பண்புடையாளர்களுக்கு 'உள்ளூர்ப்பழுத்த பயன் மரத்தை' உவமையாகக் கூறுகின்றார் :

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்.

மூன்றாவது வரிசையில் கூறும் கொடையாளருக்கு உவமையாக 'மருந்தாகித்தப்பா மரத்தைக்' கூறுகின்றார். தன்னைமறந்து, தன்னை நினையாமல், பின்வரும் பயனையோ அன்றி, தீங்கையோ மறந்து, அவசியமாயின் தன்னையே கொடுக்கும் குமணன் போன்ற பெருந்தகையாளருக்குப் பொருத்தமான உவமையாகத்தான் வள்ளுவர் கொடுத்திருக்கிறார் :

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

வள்ளுவர் கூறிய முதலாவது, இரண்டாவது வகைகளைச் சார்ந்த கொடையாளர்களைவிட, மூன்றாவது வரிசையில் கூறப்படும் பெருந்தகையாளர்களே இன்றைய சமுதாயத்துக்குத் தேவைப்படுகிறார்கள்.

பின்னர், வாழ்க்கை வளமுற்றிருக்க அவர் மனித உள்ளத்தில் தோன்றும் களைபோன்ற தீயபண்புகள் சிலவற்றை வேண்டாமென்று ஒதுக்கவேண்டுகிறார். 'அழுக்காறு என ஒரு பாவி' என்று சபித்துவிட்டு, 'அழுக்காறாமை' யின் நலத்தையும் பின்னர் கூறுகிறார். அழுக்காறு கொண்டவனை மட்டுமின்றி அவனைச் சார்ந்தவனையும் பாதிக்கும் என்று வள்ளுவர் கூறுகிறார் :

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்.

அடுத்ததாக, மனிதன் மற்றெல்லாப் பண்புகளையும் முறிக்கும் — அவன் உள்ளம் வளரவொட்டாமல தடுக்கும் 'அவாவை' வேண்டாமென்கிறார். அதே சமயம் அவாவின்மையின் மேன்மையைப் புகழ்கிறார். இவ்விரண்டிற்குப் பின்னர் வெகுளி கூடாது என்று கண்டிக்கிறார்; வெகுளாமையைப் போற்றுகிறார்.

மேற்கூறிய அவா, வெகுளி, அழுக்காறு, மற்றும் இன்னாச்சொல் முதலிய தீய பண்புகளால் வருந்தும் மனித சமுதாயம் உய்யவோர் மருந்துபோல இருக்கிறது குறள். அரிக்கப்பட்டுவரும் மனித

ச்முதாயத்திலே நெஞ்சோடு நெஞ்சு மோதாமல், மக்கள் அன்பு-அறத்தோடு வாழ அறத்தைப் போதிக்கிறார் வள்ளுவர். அவரது அறம் நெஞ்சைத் தொடும் அறம்.

நாகரிகத்திற்கு அடையாளச் சின்னமாக இருப்பவை உடுப்பும், பூச்சுந்தான். எனவே உருவத்தால் நல்லவராகத் தோன்றும் எவரும் — ஏன் நண்பர்களாக நடிக்கும் சிலரும்கூட தீயவர்களாக இருக்கலாம். தீயவர்கள் நம்மை நண்பர்களாகக் கொள்ளுவதற்குக் காரணம், அவர் நம் கருத்துக்களிலிருந்து வேறுபட்டு, பகைமை கொண்டு, என்றும் பழி வாங்குவதை, உறவாடிக் கெடுத்தல் மூலம் செய்வது என்னும் கொள்கையே; எனவே, அவர்கள் நம்மை வஞ்சித்துக் கொல்ல முயலுகிறார்கள். ‘அவ்வாறு நேர்ந்தாலும் அதைத் தெரிந்ததாகக் காட்டிக்கொள்ளாதே; அதனால் எதிரி வருந்துவான்’. பிறருக்கு வருத்தம் தரக்கூடாது என்ற கொள்கையுடைய வள்ளுவர் கூறுகிறார் :

பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

பிறர்க்குத் தீமை செய்யாமை (Ahimsa or Non-violence) என்பதுவே வள்ளுவர் கூறும் அடிப்படை அறம். எனில், இவர் அறத்துக்கும், காந்தியோ, அன்றி கிருத்துவோ கூறும் அறத்துக்கும் வேறுபாடு என்ன உளது? இத்தகைய அறம் நாட்டில் பரவினால் சண்டைகள் மூளுமா?

பின்னர்,

‘அறத்தான் வருவதே இன்பம்’ — மற்றெல்லாம்
புறத்த புகழு மில.

என்கிறார். இன்றைய சமுதாயத்துக்கு அறமே முக்கியம். அரசியல் சட்டம் அனுமதித்தாலும் பழியஞ்சிப்பொருளீட்டல் வேண்டும். ‘அஞ்சுவது அஞ்சாமை பேதமை’. அறமல்லாதவற்றால் இன்பம் கிட்டலாம். அன்றி, புகழும் வரலாம். அவை இன்பமல்ல; புகழுமல்ல; என்பது வள்ளுவர் கருத்து.

இவ்வாறு வாழ்க்கையின் நோக்கத்தையும், மக்கள் இன்பமுற்று வாழ வழிகளையும் கூறிய வள்ளுவர் தனியே ‘வீடு’ என்ற ஓர் ‘பால்’ அமைக்கவில்லை, அறம் பொருள் இன்பம் இவை தலைக்கொண்டு பெறப்படுவதே இன்பமாதலின் அவர் தனித்துக்கூறவில்லை போலும்! ஆயின் குறட்பாக்கள் பலவற்றிலும் வீட்டைப்பற்றிப் பேசுகிறார் :

புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு.

அயர்ந்தவொருவன் வெட்டவெளியில் நிற்பதில்லை. அவன் தகுதிக்கு ஏற்றவாறு ஓர் அமைதியான இடத்தில் ஓய்வு பெறுகிறான். எனவே, எதுவெல்லாம் உயிருக்கு ஆறுதல் தருமோ அதை மனிதன் வளர்க்கவேண்டும். 'உயிருக்கும் ஓர் அமைதியான இடம்தேவை' என்பது வள்ளுவர் கருத்து.

'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்ற புறநானூற்றுப் புலவனும், 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற திருமூலரும், பிறந்த தமிழ்க் குலத்தில் தோன்றியவர் வள்ளுவர். அவர் மக்கள் வாழ்க்கையை நன்கு உணர்ந்தவர். தமிழர்களின் வாழ்க்கைச் சூழ்நிலையில் உதித்ததே குறள். தமிழர் பெருமைக்கும், வாழ்க்கை வளம் பெற்றிருந்த சீருக்கும் குறள் ஒரு சான்று. குறள்நெறி உலக நெறியாகும், சமுதாயச் சிக்கல்களை அவிழ்க்க உதவும் வழிகாட்டி குறள். சுருக்கமாக அதை ஒரு மருந்துப் பெட்டி எனலாம். குறள் ஓர் இறவாத இலக்கியம். நெஞ்சைத் தொடும் இலக்கியம். அதைப் பயின்று அதன் வழிநடத்தல் தமிழராய்ப் பிறந்த ஒவ்வொருவருடைய கடமையும் ஆகும்.

"கார்காலம்"

ஆ. கந்தசாமி, இளங்கலை முதலாண்டு (தமிழ்)

அன்பின் பெருமையையும் கற்பின் அருமையையும் நங்கையர் நனி விளக்குகின்ற காலமே கார்காலமாம். அமர்க்காலத்து அரசரோடு பகைப்புலம் சென்ற, அன்றி, பொருளீட்டும் வண்ணம் வேற்றுநாடு போந்த தலைமகன் "கார்காலத்து மீண்டும் வருவேன்" எனத் தலைமகளிடம் குறித்துப் போந்தானாக, அதுகாறும் அரிதின் ஆற்றியிருந்த கற்பணங்காய தலைமகள் "கார்காலம் வரக்கண்டும் அவர் வரக் காணேனே!" என ஆற்றாமை விஞ்சுவாள். இவ்வாறே தஞ்சேனையோடு பாசறையிலே வீற்றிருக்கும் தலைமகன், பகற்காலத்துப் பகை யெதிர்த்த களைப்பும் நீங்காது இரவெல்லாம் "எக்காலை போர் முடியும்; எஞ்ஞான்று தலைவியைக் காண்போம்" என்று எண்ணி எண்ணி அமர்முடியுங் காலத்தை அவாவினால் கடிதின் நோக்குவான். பொருளீட்டும் வண்ணம் அயல் நாடு போந்த பிறிதொரு தலைமகன், விழைந்த பொருளினை ஒல்லும் வகையில் செறிவுடன் திரட்டித் தந்நாடு திரும்புங்காலத்துக் கார்காலம் தோன்றவே, "தன்னைக் காணாத தலைவி எங்ஙனம் ஆற்றியிருக்கிறாளோ" என்று தேரினை விரைந்து செலுத்தச் செய்வான்.

இன்பங் கண்ணிய இக்கார்காலம், அதன் பின்னணித் தோற்றமாய முல்லைநிலக் கவினுடன் வளம்பெற்று நிற்கக் காண்கின்றோம். கார்காலம் வந்துவிட்டால், கூத்தாடும் மகளிர்போல மயில்கள் கவின் பெற ஆடுதலும், காடுகள் கொன்றைப் பூக்களால் மலர்தலும், அம்மலர்களில் இசைவண்டுகள் ஊதா நிற்றலும் இனிய காட்சிகளாக நின்று மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்வனவாக விளங்குகின்றன. இதனை கண்ணங்கூத்தனார் என்னும் நல்லிசைப் புலவர்

"ஆடு மகளிரின் மஞ்ஞை யணி கொளக்
காடுங் கடுக்கை கவின் பெறப் பூத்தன
பாடு வண்டூதும் பருவம் —(கார்நாற்பது-4)

என்ற செய்யுளில் நயம்பட உரைக்கக் காண்கின்றோம்.

இம்முல்லைத் திணையின்கண் கார்காலத்திற் கணவனது பிரிவாற்றாமையான் அரிதின் ஆற்றியிருக்கும் தலைவியின் மெல்லிய நெஞ்சத்தை மேலும் ஈர்க்கும் வகையான் பல காட்சிப் பொருள்களைக் கவிஞர் படைத்து வைத்தனர். அவையாவன, மாலைப் போதில் பூத்து நிற்கும்

முல்லை, கலாபம் விரித்தாடும் மயில், மாலைக் கோவலர்கள் எழுப்பும் வேய்ங்குழலோசை என்பனவாம். இந்தப் பொருள்களைக் காணுந்தோறும் தலைவியின் உள்ளம் பசலையால் பெரிதும் வாடும். அவ்வாறு ஆற்றாமையினால் விஞ்சியிருக்குந் தலைமகளுக்கு ஆறுதல் கூறவல்ல அறிவணங்காய தோழி ஒருத்தியிருப்பாள். அவள் சொல்வாள் "இதோ நின் கணவர் வந்துகொண்டிருக்கிறார், இனி நின் கவலையொழித்து இருப்பாயாக" என்று தலைவியின் துயரைப் போக்கி ஆற்றுப்படுத்தும் தோழியின் கூற்று படித்து இன்புறற்கு உரியதாம்.

முல்லை நிலத்தின்கண் வாழ்கின்ற தலைமகள் ஒருத்திக்குக் கார்காலம் கொலையாளியைப் போலக் காட்சி யளித்ததாம். அந்தி வேளையில் குளிர்ந்த மணத்தினையுடைய வெண்காந்தள் மலர் துடுப்பினைப் போன்ற அரும்புக்குலைகளை ஏந்திக்கொண்டு நிற்க, கார்ப்பருவத்தினை எதிர்கொண்டு முகில்கள் மிக்க வானத்தின்கண் இடிகள் இடித்தொலிக்க, அருகில் தனது காதலன் இல்லையே எனத் தலைமகள் நடுநடுங்கும் படியாக அந்தக் கார்காலம் கொல்லுநரைப் போல் நின்றதாம். இதனை,

" தண்ணறுங் கோடறுடுப் பெருப்பக் காரெதிரி
விண்ணுயர் வானத்துருமுறற்றத்— திண்ணிதிற்
புல்லுந ரில்லார் நடுங்கச் சிறுமாலை
கொல்லுநர் போல வரும் " —(ஐந்திணை எழுபது-17)

என்ற வெண்பாவினால் உணரலாம்.

இவ்வாறு கொடுமையிலும் கொடியதாய் மிளிரும் இக்கார்காலம் இன்பங்கண்ணியது என்று கூறுதல் சற்றும் பொருத்தமில்லையன்றோ! ஆனால், உண்மைப் பொருள் அஃதன்று. தலைமகனும் தலைமகளும் கூடி வாழ்கின்ற காலத்தைக் காட்டிலும், இருவரும் பிரிந்து இருத்தலும், இருத்தல் நிமித்தமுமாய் இக்கார்ப் பருவத்தில் அன்பொழுக்கமும், கற்பொழுக்கமும் சிறக்கக் காண்கின்றோம். அஃதுமன்றி, தலைமகனுக்குரிய கடமையாய வீரம், பொருளீட்டல் ஆகியனவும், நங்கையர் நனிகாக்கின்ற கற்பும் இப்பருவத்திலேயே நிகழ்கின்றன. அதனாற்றான், முல்லையென்பதற்கே தமிழறிஞர்கள் 'கற்பு' எனப் பொருள் கூறுவர். கவின்பெறும் இம்முல்லைத் திணையிற் வாழ்கின்ற மகளிர் தங்குழலில் முல்லை மலரைச் சூடிக் கொள்வது கற்பு பற்றியே என்பது தெற்றெனப் புலனாம். இனி இப்பருவத்தில் நிகழும் சில சுவையான நிகழ்ச்சிகளைக் காண்குதும்.

தலைவனது பிரிவாற்றுமையால் தலைவியின் உள்ளம் பசலையால் படாதபாடுபடுகிறது. தலைவியின் துயரைக் கண்ணுறும் தோழி என் செய்வது என ஏங்குங் காலத்து, திடீரென ஏதோ ஓர் உணர்வு கொண்டவளாய் தலைவியைப் பார்த்து "அம்மா! இஃது கார்ப்பருவம் அன்று, ஆதலின் நீ அஞ்சல், நின் கொழுநன் குறித்துப் போந்த பருவத்தில் தவறுது வருவான்" என உரைக்கின்றுள். இதனைக் கேட்ட தலைவி தோழியைப் பார்த்து.

"மூங்கில் போலும் தோள்களையுடைய தோழியே! நீ, 'இஃது கார்ப்பருவம் இல்லையென்று மொழிந்தாய். மழைத் துளிகள் பெருகிவரும் இப்பொழுதில் இதனை வேண்டுமென்றே கூறினுய் போலும்! பருவமல்லாத ஒன்றைக் கண்டு பருவமாக எண்ணி வருந்துவேனு? எனவே இஃது கார்ப்பருவம்தான். ஆயினும் இஃது கார்ப்பருவம் இல்லையென்று என்னைத் தேற்று நின்றுய். ஆனுல் நானே அப்பருவமல்லாப் பருவத்திற்கு எனது கண்ணீரினை நீராகக் கொண்டு, தாரை நீராக வார்த்துக் கொடுத்தேன்" என்றுள்.

பருவமன்றென்று வற்புறுத்தின தோழிக்குத் தலைமகள் பருவமே என்றழிந்து சொல்லியதாக அமைந்த மேற்காணும் ஓவியத்தைப் புலவர் கூறுமாற்றன் காணுங்கள்.

> "ஒருவந்த மன்று லுறைமுதிரா நீராற்
> கருமந்தான் கண்டழிவு கொல்லோ—பருவந்தான்
> பட்டின்றே யென்றி பணைத்தோளாய்! கண்ணீரா
> லட்டினே னுவி யதற்கு." —(திணைமாலை-103)

அடுத்து, வினைமுற்றி மீளுகின்ற தலைவனின் மனக்கண் முன் தலைவியின் மென்மையுள்ளம் தோன்றுகின்றது.

"கார்ப்பருவத்து விரைவில் வருவேன் என்று கூறினேனே, இப்பொழுது அப்பருவம் வந்துவிட்டதே! தலைவி எங்ஙனம் ஆற்றுமை விஞ்சுவாளோ?" என்ற எண்ணங்கள் அவன் நெஞ்சகத்தில் அலை மோதுகின்றன. அவ்வமயம் அவனைத் தூக்கிச் செல்லுகின்ற தேரும் வேகம் குறைந்து செல்வதாக எண்ணுகிறுன். உடனே தேர்ப்பாகனை விளித்து,

"நூலறிவு மிக்க பாகனே! உன்னுடைய தேர் கடிதாகச் செல்வதாக! தேன் கூடுகள் மிகுந்த முல்லை நிலத்தின் கவினைப் பார்ப்பதுபோல என் வரவினை நோக்கிக்கொண்டு, தான் இளவயது முதற்கொண்டே மேற்கொண்ட கற்பொழுக்கத்தினை நெஞ்சினிருத்தி, உயிர்காத்து, கவுளின்

மிசைக் கையூன்றி நிற்பாளது நிலைமையை நாம் சென்று அறிவோம். தேரினை விரைந்து செலுத்துவாயாக!'' என்று கூறுகின்றான்.

"நானவின்ற பாக! தேர் நொவ்விதாச் சென்றீக!
தேனவின்ற கானத் தெழி னோக்கித்—தானவின்ற
கற்புத்தாள் வீழ்த்துக் கவுண் மிசைக் கையூன்றி
நிற்பாணிலை யுணர்கம் யாம்'' —(ஐந்ஐம்பது-10)

இந்த வெண்பா தலைவனது உள்ளத்தை ஓர் ஓவியமாகக் காட்டுகின்றது.

தலைமகனும் வந்துவிட்டான். தலைவியும் இன்புற்றாள். தலைமகன் குறித்தப் பருவத்தின்கண் வந்துவிட்டானே என்ற உவகைக் களிப்பால் தானடைந்த துயர்களையெல்லாம் முற்றும் மறந்தாள். அப்பொழுது, தலைவனைப் பிரிந்திருந்த காலத்தில் தன்னை வருத்திய ஈர்ங்குழலாரைக் காண்கின்றாள். அஃது இப்பொழுது சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கின்றது. உடனே தோழியை விளித்துப் பின்வருமாற்றான் கூறினாள்.

''தோழி! முன்பு நான் தலைவனைப் பிரிந்திருந்த காலத்தில், நம்மை வருத்துதற்கு எளியரென நினைந்து, வருத்திய ஈர்ங்குழலார் உலகிற்பலரும் அறியும் வண்ணம் சுட்டுத்துளைசெய்யப்பட்ட முறையினைக் காண்பாயாக! இதனால் இப்பிறப்பின் கண்ணே ஒருவன் செய்த தீவினை, இப்பிறப்பிலேயே அவனை அடைந்து கெடுக்கும் போலும்! ஆனால் இதனையறியாத சில அறிவிலிகளே ஒருவன் இப்பிறப்பில் செய்த தீவினை மறுபிறப்பின்கண்தான் பயன் கொடுக்கும் எனப் பகர்வார்கள். அஃது முற்றும் பொய்''

தலைவி, ஈர்ங்குழலாரை எள்ளி நகையாடும் இக்காட்சி நல்லதொரு சுவையாக அமைந்திருக்கின்றது. கார்ப்பருவத்தில் கவின் பெறும் முல்லைத்திணையில் நிகழும் நிகழ்ச்சிகள் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்வனவாக அமைந்துள்ளன.

காதல் பிறந்தது.

ஜே. எம். சாலி, இரண்டாம் வகுப்பு.

மாலைப் பொழுது. கன்னிக்காற்று இன்பமாக வீசிக்கொண்டிருந்தது. புள்ளினத்தின் கோலக்குரல் அந்தமாலை நேரத்திற்கு உயிரூட்டிக் கொண்டிருந்தது.

ஆனால், அரண்மனையிலே அமைதி தேங்கி நின்றது. மன்னனின் மனத்திலே அந்தகாரம் ஆனந்தக் கூத்தாடியது. வேந்தன் சுத்தோதனன் ஆடாமல் அசையாமல் சிலையாக அமர்ந்திருந்தான். ஆயிரமாயிர இன்பங்கள் சாக்கிய நாட்டிலே சிரித்து விளையாடுகின்றன. ஆனால் ஆளும் வேந்தனின் நெஞ்சம் அலைகடலாகவல்லவோ மாறிவிட்டது? முழுமதியை மறைத்த முகிலைப்போல் முடிவில்லா சிந்தனை அவன் நினைவை மயக்கியது. அமைச்சர்கள் மோனத்திலே மூழ்கிக் கிடந்தனர். சுத்தோதனனின் பார்வை பரந்த வானவெளியில் திரிந்து நின்றது.

புன்னகை மின்னும் வண்ணமுகத்தோன் சித்தார்த்தனின் எழிலுருவம் வேந்தனின் உள்ளத்தே உதித்தது. ஒண்மலர் ஒத்த அந்த முகத்திலே எத்தனை தண்ணொளி! அழகும் ஆற்றலும் அங்கமெலாம் பொங்கிப்பூரித்து, சித்தார்த்தன் அழகுப் பிம்பமாக அல்லவா விளங்குகிறான்? கன்னியர் நெஞ்சம் அவன் கட்டழகிலே கருத்தழிகிறது.

ஆனால் சித்தார்த்தன்.........?

பாராளும் வேந்தனாகப் போகிறவனுக்கு அரசிலே பற்றில்லை. மங்கையரிடத்து மையல் உண்டாகவில்லை. ஈசன் படைத்த இன்பத்தையெல்லாம் அவன் இதயம் உணரவில்லையா?

சுத்தோதனனின் உள்ளம் கலங்கியது. 'சித்தார்த்தன் மன்னர் மன்னனாய் மணிமுடிசூட வேண்டும். தரணிமுழுதும் தனியரசாள வேண்டும்' என்றெல்லாம் எண்ணி யெண்ணி இன்பக்கனவுகள்கண்ட தந்தையுள்ளம் தவிக்கத்தான் வேண்டுமா? அசிதமாமுனிவன் கூறியதும், கனவுநூல் கற்றவர் மொழிந்ததும் வேந்தன் நெஞ்சை அறுத்தது. சித்தார்த்தன் ஆசையை அழித்துவிட்டால், சுத்தோதனனுக்கு வாழ்வேது? முற்றத் துறந்த முனிவனாக அவன் மாறிவிட்டால், அழகுமிக்க சாக்கிய நாட்டிற்கு என்ன பெருமை மிஞ்சும்? காட்டிலே சென்று சித்தார்த்தன் கடுந்தவம் புரியவேண்டும்! தந்தையுள்ளம் இதனை எங்ஙனம் தாங்கும்?

இடுகாட்டு அமைதி இன்னமும் நிலவியது. பழுமரமொன்று. பசுமைக்கோலம் பரந்துநிற்கும் ஒருகிளை. மழலை பேசும் கிள்ளைக் கூட்டம் அங்கே கூடியிருக்கின்றன. இன்பம் கொஞ்சுகிறது. ஒரே ஒரு இளங்கிளி

மட்டும் எதிலும் இன்பங்காணுமல் தனித்துப் பறக்கிறது. சுற்றத்தைத் துறந்து, சிறகடித்துப் பறந்து கொண்டேயிருக்கிறது விண்ணிலே. கிளியின் போக்கிலே புதுவேகம்......அது பறந்து மறைகிறது. ஏன் இப்படி பறந்து மறையவேண்டும் ?

சுத்தோதனன் உணர்வுபெற்ருன். அவன் கண்டது கனவா, நினைவா? கற்பனையா? எது, எது? கிளியும் சித்தார்த்தனும்; இதனை நினைக்கவே அவன் நெஞ்சம் கூசியது. நெடுமூச்சு அவனுள்ளிருந்து இழைந்தது. உணர்வையெல்லாம் ஒன்று திரட்டிக்கொண்டு சுத்தோதனன் ஒரு அமைச்சரிடம் பேசினுன்.

"அமைச்சரே! அரண்மனைச் செல்வத்திலே ஆசையற்று விளங்குகிருன் என் செல்வன். பரந்த வையத்தை ஆளும் எண்ணம் அவன் உள்ளத்தில் நிலைக்கவில்லை. அவன் உள்ளத்தை மாற்றும் உபாயம் கூறுங்கள்."

வேந்தனின் உடல் நடுங்கியது. அமைச்சர் ஒருகணம் அமைதியிலாழ்ந்தார்.

"வேந்தே! நம் அன்புச் செல்வரை ஒரு சிறுநோய் பற்றியிருக்கிறது. அந்த நோய் நீங்கவேண்டும். காதலெனும் மருந்தால்தான் அது முடியும். மைந்தனின் உள்ளம் மங்கையர் மையலில் மூழ்கவேண்டும். மங்கையின் மதிமுக வனப்பும், கணையொத்த கருவிழிகளின் கடுமையும் அறியாதவர் நம் அறிவுச்செல்வர். ஆயிழை யொருத்தியைக் கண்டு காமுற்றவரில்லை. நங்கையின் அதரத்திலே ஊறும் அமுதின் இனிமைக்கு அகிலத்திலே ஈடேது? மனத்துக்கினிய மனைவி; தோழர், தோழி அனைவரோடும் அவரை வாழவைத்தலே நலம். மத்தயானையை யொத்தது ஆண் உள்ளம். மங்கையிட்ட மையிழைக்கு அந்த மனம் அடங்கி ஒடுங்குவதில்லையா? ஆதலின் இளவேந்தரை இல்லறமேற்கச் செய்யவேண்டும்."

அமைச்சரின் அறிவு மொழிகள் அரசனுக்கு ஒளிகாட்டின. ஆனுல் மகிழ்ச்சி அவனுள்ளத்தே முற்றும் அரும்பவில்லை. சுத்தோதனன் சிந்தித்துப் பேசினுன்.

"இன்பமறியா இளைஞன் என் செல்வன். அவனுக்குரிய அழகியைத் தேர்ந்தெடுக்கச் செய்வோம். மங்கையர் குழுவிடையே நிறுத்தி வைத்து, 'ஏற்றவளை எடுத்துக்கொள்' என்ருல் அவன் உள்ளம் இசையுமா? பருவ மகளிர் யாரையும் நோக்காது அப்பால் அகன்றுவிட்டால் செய்வது என்ன?" — வேந்தனின் வினுவிலே பொருள் இருந்தது. அறிவில் சிறந்த அமைச்சர் ஒருவர் எழுந்தார்,

"அரசே! எங்கும் சுற்றித்திரிகிறது சிங்கம். அம்பு அதன்மேல் பாயுமட்டுந்தானே அதனுல் திரியமுடியும்? மங்கையின் மைவிழிகள்

கூர்மையிலே திறனழியாத ஆண் நெஞ்சம் ஏது? மதிமுகத்தின் தண்மையிலே மயங்காத ஆடவர் இதயம் எங்கேயிருக்கிறது? சித்தார்த்தன் இந்த விதிக்கு விலக்கா? உதயகுமரியொத்த ஒரு கன்னியின் கயல்விழி கண்டு, சித்தார்த்தன் மயங்கத்தான் போகிருன்.........

"நான் கூறும்வழியைக் கேளுங்கள். எழில்மிக்க விழா ஒன்று கொண்டாடவேண்டும். அந்த விழாவுக்கு அழகிய கன்னியர் அனைவரும் வரவேண்டும். சாக்கிய நாட்டிலே அழகு மங்கையர்க்குப் பஞ்சமேது? அழகு இருக்கவேண்டும்; இளமை இருக்கவேண்டும்; ஆடல், பாடல் அறிந்திருக்க வேண்டும். அவர்தம் திறத்தினை சித்தார்த்தன்முன் காட்ட வேண்டும். சிறந்தவருக்கு சில பரிசுகளை மைந்தன் கையால் வழங்கச் செய்தால், அவர்பக்கம் அத்தனை அழகிகளும் வருவார்கள். யாரேனும் ஒருத்தியை அங்ஙனம் காணும்போது மைந்தன் மனம் நெகிழும். முகம் மலரும். அவளே அவருக்குத் துணைவியாகக் கூடாதா?"

சுத்தோதனன் மகிழ்ந்தான். உள்ளத்திலும், உடலிலும் புதுமையொளி பாய்ந்தது. அவை கலந்தது.

பட்டணமெங்கும் பறையொலித்துக் கொண்டிருந்தது. கன்னியர் இதயம் களிப்பால் நிறைந்தது. அரசிளங்குமரனை 'தாம் தாம்' அடைய வேண்டும் என்ற ஆசை வெள்ளத்திற்குக் கரையேது? கங்கேது?

அன்றுதான் திருவோலக்க மண்டபத்திலே மங்கையர் கூடும்நாள். திக்கெங்கும் இசை முழங்கின.

வைகறைப் பொழுதிலே கன்னியர் துயில்களைந்து விட்டனர். கருத்தின் ஆசை கொஞ்சமா? மகிழ்ச்சியோடு மஞ்சனம் ஆடினர். வண்ண ஆடைகளும் அணிகளும் பூண்டு மின்னல்கொடிகளாக விளங்கினர். கூந்தலை வாரிமுடித்த கொண்டையிலே எத்தனை கோலம்! மல்லிகை, முல்லைச் சரத்தில் கமழும் மணத்திற்கீடேது? மையிட்ட வேல்விழிகளிலே அத்தனை கூர்மையா? நெற்றியிலே திலகம். சிற்றடியிலே செம்பஞ்சு. அரம்பையரும் அந்த அழகிற்கு அடிபணியத்தான் வேண்டும். மணவறையேறும் மங்கையர்போல மண்டபத்திற்கு வந்து கூடிவிட்டனர் அனைவரும்.

சித்தார்த்தன் பொன்சிங்காதனத்திலே அமர்ந்திருந்தான். ஆயிரம் ஆயிரம் அஞ்சன விழிகள் அரசிளங்குமரனை நிமிர்ந்து நோக்க நாணி நிலத்தை நோக்கின. ஆனல் உணர்ச்சியோ நீரோட்டமாக அலை பாய்ந்தது. வரிசை வரிசையாய் வந்து பரிசில் பெற்றுப்பணிந்து சென்றனர் மகளிர். அந்தக் காட்சியிலே எத்தனை அழகு?

மைந்தன் மனத்திலே சலனமேதும் இல்லை. அமைதியும், தண்மையும் அவன் முகத்திலே தவழ்ந்து கொண்டிருந்தது. கன்னியர்க் கெட்டா கனிதானு அவன்?

அழகுச்சிலை யொருத்தி வந்து நின்ருள். 'குமரனின் அன்பிற்குரியவள் இவளே' என்று போற்றினர் அனைவரும். செல்வன் திருமுகம் நோக்கினுள். திறன் அழிந்தாள்; சிந்தை தடுமாறியது. நடுங்கிய வண்ணம் சித்தார்த்தனருகே நெருங்கினுள். வழங்கும் பரிசினை வாங்க அவள் கைகள் நீளவில்லை. சேடியருகே ஓடினுள். ஒடுங்கி நின்ருள்.

அந்தக் கணம்.........!

சித்தார்த்தனின் சிந்தை படபடத்தது. வதனத்திலே கலை பொலிந்தது. புன்னகை அரும்பியது.

நேரம் நெளிந்தது. மைந்தனைக்கண்டு வணங்கி, ஒருவர் பின் ஒருவராய் மறைந்தனர் மங்கையர். இருந்த பரிசுகள் எல்லாம் மறைந்தன.

அப்பால், அச்சமுற்ற அங்கையற்கண்ணி வந்தாள். திங்களைப் பழிக்கும் திருமுகம் வந்தது. அழகின் செல்வி வந்தாள். யசோதரை என்னும் அந்த யௌவன குமாரி உணர்வுபெற்று வந்தாள். சித்தார்த்தன் அருகே வந்தாள். உள்ளம் திடுக்கிட்டான் சித்தார்த்தன். இணையும் இரு துருவங்கள்போல் இருந்த இருவரையும் அனைவர் கண்களும் கண்டு களித்தன.

"எனக்குப் பரிசு ஏதுமில்லையா?" அவள் கண்டத்திலிருந்து அமுத மொழி எழுந்தது. புன்னகை அரும்பி, போதாகி, மலர்ந்து, விரிந்தது அந்தக்குமரியின் அதரத்திலே. நிலைமறந்தான் சித்தார்த்தன். ஈவதற்கு என்ன பரிசு எஞ்சியிருக்கிறது? தடுமாறினுன் அரசிளங்குமரன். தன் மார்பை நோக்கினுன். மரகதமாலை அங்கே நெளிந்து கொண்டிருந்தது. கழற்றினுன். நெருங்கி நின்ருள் கன்னி யசோதரை. அவளது அழகிய மார்பிலே அதனைப் பூட்டினுன். நிமிர்ந்து நோக்கினுன் அவளை; அவள் எதிர்ந்து பார்த்தாள்!

கண்களும் கண்களும் கலந்தன. மோனம்! கண்களும் கண்களும் கலந்து பேசின. அந்தப் பேச்சிலே காதல் பிறந்தது. யசோதரையும் சித்தார்த்தனும் விழிகளாலே பேசிக்கொண்டே இருந்தனர்.

சைலாவின் காதல்

(தழுவல் — கிரேக்கக் கதை)

ப. இரகோத்தமன், III B. A., IV b/t

அந்தி நேரம், சோலையின் நடுவே இளவரசியும், மற்றத் தோழியர்களும் ஒருவரை ஒருவர் கேலி செய்து விளையாடிக் கொண்டிருந்தனர். ஏனோ ஒருத்தி பெருமூச்செறிந்து கொண்டு இளவரசியை நோக்கி ஓடி வந்தாள். இளவரசி அவளை நோக்கி,

"என்னடி! ஏன் இவ்வளவு வேகமாக ஓடிவருகின்றாய்" என்றாள் 'அம்மா! 'கிரீடான்' நகர மன்னர் 'மினோஸ்', நம் நாட்டின் மீது படையெடுத்து வருகிறாராம்" என்றாள். அங்குள்ளோர் அனைவரும் இச் சேதியைக் கேட்டுத் திடுக்கிட்டனர்.

ஆம்! சின்னாட்களுக்கு முன்தான் இளவரசி 'சைலா' தன் உப்பரிகையிலிருந்து 'மினோஸ்' மன்னனைக் கண்டாள். கண்டதும் அவன் அழகில் ஈடுபட்டுக் காதல் கொண்டாள். அன்றிரவு மினோஸ் மன்னனைக் கண்டு தனியாகத் தன் எண்ணத்தை வெளியிட்டாள். அவனும் அவள் வேண்டுகோளைக்கேட்டு திருமணத்திற்கு ஒப்புதல் அளித்தான். ஆனால் மறுதினம் தந்தை 'நிசூசசுக்கும்' மினோசுக்கும் நடந்த பேச்சுவார்த்தையில் குழப்பம் உண்டாகியது. இவற்றை அறிந்த சைலா மனம் பதறினாள். மேலும் சற்றுமுன் கேட்ட செய்தி அவள் உள்ளத்தைத் தாக்குவதாக இருந்தது.

"இதற்கு என்னடி செய்யலாம்? என்றாள் சைலா.

"எனக்கென்னம்மா தெரியும், தங்கள் தந்தையிடம் சொல்லிப் பாருங்களேன்! என்றாள் மற்றொருத்தி.

"போடி! என் தந்தையின் குணம் தெரியாதா உனக்கு? அவரிடம் வேறு கூறினால் மேலும் விபரீதம் நேரும்" என்றாள் சைலா.

"அப்படியானால் மினோஸ் மன்னரையே சண்டையை நிறுத்தும்படி கேளுங்களேன்." என்றாள் ஒருத்தி.

"சரி முயற்சித்துப் பார்க்கிறேன்" என்று கூறி மினோஸ் மன்னன் முகாமிட்டுள்ள இடத்திற்குச் செல்ல, ஆயத்தங்களை இரகசியமாகச் செய்யும்படி தோழிகளிடம் கூறிவிட்டுச் சென்றுவிட்டாள். அவள் உள்ளத்தில் ஒரு பெரும் புரட்சியே நிகழ்ந்தது! ஒரு புறம் தந்தை, அவர் காட்டும் பாசம், அன்பு, மற்றோர் புறம் காதலன், அவன் அரும்பு மீசை, துடுக்கான பார்வை, மிடுக்கான உடல் வனப்பு, அவன் அளித்த திருமண ஒப்புதல். இவைகள் அனைத்தும் அவள் மனக்கண் முன் போராடின.

''வண்டி தயாராகிவிட்டதம்மா ! யாரும் வெளியில் இல்லை. இது தான் தக்க சமயம்'' என்ற குரல் கேட்டு, தன்னிலை உணர்ந்து திரும்பினாள். நள்ளிரவில், மாற்றுடையில் காதலனைச் சந்திக்கப் புறப்பட்டுச் சென்றாள். பல இன்னல்களுக்கிடையேயும், பல சோதனைகளுக்கிடையேயும் காதலனைச் சந்தித்தாள். கெஞ்சினாள்! ஆனால் அவனோ ''ஒன்று 'மெகாரா' நாட்டை நான் அடைய வேண்டும், இல்லையேல் அதற்காக நான் இறக்க வேண்டும். இதுவே என் இறுதி முடிவு'' என்றான். ''அன்பே! என் திருமணத்திற்குப்பிறகு அந்நாடு உங்களுக்குத்தானே! வேண்டுமானால் இக்கிரேக்க நாட்டையே வென்று தரும்படி தந்தையைக் கேட்கிறேன். எனக்காக நீங்கள் சண்டையை நிறுத்துங்கள்'' என்றாள்.

''சைலா! இவ்விஷயத்தில் உன் உதவி எனக்குத் தேவை. நீ உதவி செய்வாய் என்ற ஒரே எண்ணத்தில்தான் வந்திருக்கின்றேன். நீ மறுத்தால் உன் நாட்டு மண்ணில் என் உயிர் போவது நிச்சயம். என்ன! உதவி செய்வாயா? இங்கே என்னைப்பார்'' என்று அவள் கண்ணீரைத் துடைத்த வண்ணம் கேட்டான்.

''என்ன மினோஸ் செய்யவேண்டும்?'' என்று விம்மியவாறே கேட்டாள்.

''சைலா ! உன் தந்தையின் தலையிலேயுள்ள பொன்னிறக் கூந்தலை எடுத்துக் கொண்டு வரவேண்டும். நீ இவ்வுதவியைச் செய்தால் உன்னை மணக்க அட்டியில்லை. இல்லையேல் நீ என்னை மறந்துவிடவேண்டியது தான். மேலும் பேசிக் கொண்டிருக்க நான் விரும்பவில்லை. உன் எண்ணத்தைக் கூறிவிட்டு இவ்விடத்தை விட்டுச்சென்றுவிடு!'' என்றான்.

அவளும் கெஞ்சிப்பார்த்தாள். முடிவாக உதவி செய்வதாகக் கூறி விட்டு வந்துவிட்டாள். அன்றிரவே தன் தந்தை அயர்ந்து தூங்கும் பொழுது, அவன் தலையிலுள்ள பொன்னிறக் கூந்தலை வெட்டி, தன் தோழியின் மூலம் கொடுத்தனுப்பிவிட்டாள்.

எங்கும் போர் பற்றிய பேச்சு. வீரர்கள் அணிவகுத்து வீதியின் வழியே சென்றனர். ஓல அழுகுரல் அரண்மனையின் சுவர்களைத் தாக்கிப் பிரதிபலித்தது ஒற்றர்கள் போர்ச் செய்தியை இளவரசிக்கு அடிக்கடி கூறினர். ஒருவன் பரபரப்புடன் இளவரசியை நோக்கி ஓடிவந்தான். அவன் ''இளவரசியாரே ! தங்கள் தந்தை வீரமரணம் அடைந்துவிட்டார்'' என்று தழதழத்தக் குரலில், தலை குனிந்தவாறே கூறினான். சைலாவின் முகம் பேய் அறைந்ததுபோல் மாறியது. அழுதாள், கதறினாள், தலையை மோதிக் கொண்டாள்.

இதற்கிடையில் ஒருத்தி "இளவரசி...... இளவரசி" என்று கூவிய வாறே ஓடிவந்தாள். தலையை நிமிர்த்தி, எதிரில் நின்றவளை சோகப் பார்வையுடன் "ஏன்" என்ற குறிப்புத் தொனிக்க நோக்கினாள். சைலா நிலை உணர்ந்த அவள் அழுதவாறே "மினோஸ் மன்னர் தன் நாட்டிற்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார் இளவரசி" என்றாள். அதிர்ச்சி அடைந்து "ஏன்? எதற்காக?" என்றாள்.

தழுதழுத்தக் குரலில் "தாங்கள் பகைவரின் மகளாம், தங்களை மணக்க அவர் சம்மதிக்க மாட்டாராம்! அவர் நாட்டு மக்களும் விரும்ப மாட்டார்களாம்! மேலும் தங்களைப் பலவாறாகப் பேசி, என்னையும் வெளியே பிடித்துத் தள்ளும்படி உத்தரவிட்டாரம்மா!" என்றாள்.

"கண்ணே சைலா! தந்தை இறந்ததற்காகவா இவ்வளவு துயரப் படுகிறாய்? இங்கே என்னைப்பார்! வெற்றியுடன் திரும்பியுள்ள உன் காதலனைப்பார்!" என்று கூறிக் கண்ணில் வழியும் கண்ணீரைத் துடைப் பான் என எண்ணியிருந்த சைலா, மினோஸைப் பார்க்க உடனே ஏற்பாடு செய்யும்படி கூறிப் புறப்பட்டாள்.

இன்னும் சற்றுத் தூரம்தான் இருக்கிறது 'மினோசின்' கப்பலைப் பிடிக்க. அந்நேரத்தில் ஓர் பறவை அவள்மீது விழுந்து பற்றிக்கொண் டது. ஆம்! மகள் தன்னை வஞ்சித்துவிட்டாள் என்ற உண்மையை இறக்கும் தருவாயில், பொன்னிறக் கூந்தல் இல்லாததைக்கண்டு அறிந் தான் நிசூஸ் மன்னன். மெகாரா நாட்டின் நிலை அக்கூந்தலில் இருக்கிற தென்றும், அது சென்றுவிட்டால் உயிர் போகும் தருவாயில் பறவையாக மாறிவிடுவான் என்பதும் இறைவனின் சாபம். அப்பறவை மகள் மீதுள்ள பாசத்தினாலோ அல்லது வஞ்சித்தாள் என்ற கடுஞ்சினத்தி னாலோ சைலாவின் மடிமீது விழுந்து இறந்தது.

உடனே சைலா குயிலாக மாறினாள். தந்தையையும் இழந்து, காதலனையும் இழந்து அக்குயில் உருவிலுள்ள சைலா என்ன செய்வாள். மினோசிடம் நான்தான் சைலா என்றால் ஒப்புக்கொள்வானா? அவனைச் சுற்றி வட்டமிட்டுக்கொண்டே அவன் நாடு சேர்ந்தாள். அவன் உப் பரிகையிலும், சோலையிலும் அமர்ந்து சோக கீதம் இசைத்தது அக்குயில். அக்குயில் எதை நினைத்துச் சோகமாகப்பாடியிருக்கும்;

"காதல், காதல், காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல், சாதல், சாதல்" என்றிருக்குமோ? அல்லது
"காதலை வேண்டிக் கரைகின்றேன், இல்லையெனில்,
சாதலை வேண்டித் தவிக்கின்றேன்,"

என்று பாடியிருக்குமோ? யார் கண்டார்கள்!

இதயத்திலே ஒரு முள்

A. T. சௌந்தரராசன், B. A.

எங்கும் இருள் சூழ்ந்திருந்த வேளை. அமைதியைச் சுவர்க்கோழிகளும், ஆந்தைகளும் சிதைத்துக்கொண்டிருந்த நேரம். தூரத்திலே எங்கோ ஒரு நாயின் ஓலம்; கோட்டானின் கொடூரக்குரல். மாளிகைபோன்ற ஒரு வீடு. அதில் ஒரு சிறிய அறையில் மட்டும் விளக்கொளி. கையில் புத்தகத்துடன் ஓர் இளைஞன் ஆழ்ந்த சிந்தனையிலே......... இடையிடையே இதயத்தை வதைக்கும் இருமல். அவன் அறியாவண்ணம் நெருங்கிக் கொண்டிருந்தது ஓர் உருவம். "பலத்த ஆராய்ச்சியோ?" என்ற குரல்கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான் இளைஞன். "நீ யார்" என்றான். "நான்?" நகைத்தது உருவம். "நான்தான் இதயமணி......"

"வேடிக்கையான பெயர்! நீ எப்படி இங்கு வந்தாய்? ஏன்? என்ன வேண்டும் உனக்கு...... இந்த வேளையில்........?"

"மணிமாறனுக்கு நான் வந்ததில் பயம் ஏதாவது........" என்றது உருவம்.

"என் பெயர் உனக்கு......"

"எப்படித் தெரியும் என்று கேட்கிறாயா? உன் இதயத்தைத் தொட்டுக் கேள் தெரியவரும்." என்றான் இதயமணி.

மணிமாறனுக்கு நெஞ்சிலே ஏதோ 'சுருக்' கென்றது போன்ற ஓர் உணர்ச்சி..........

"சரி, புதிர்போட்டது போதும். உனக்கு என்ன வேண்டும்", என்றான்.

"அதையே நான் திருப்பிக் கேட்கிறேன். சரி, நான் நுழைந்த சமயம் என்ன ஆராய்ச்சியிலாழ்ந்திருந்தாய்?"

இளைஞன் பதிலேதும் கூறாமல் அருகிலிருந்த புத்தகத்தைச் சுட்டிக் காட்டினான். 'துன்பத்தின் எல்லை' என்றிருந்தது அதன் தலைப்பு.

"துன்பத்தின் எல்லையைக் கண்டுபிடித்துவிட்டாயா?" என்றான் இதயமணி.

"இன்னும் படிக்கவில்லையே அந்தப் புத்தகத்தை. புத்தகத்தின் தலைப்பை மாத்திரம் படித்தேன். சிந்தனை எங்கோ சென்றுவிட்டது. கொடுமையின் வரையறை ஏதாக இருக்குமென்று நினைத்துக்கொண்டே இருந்தேன்........"

கலகலவென நகைத்தது உருவம்; "இவ்வளவுதானு......? கனவு ஏன் காணவேண்டும். நனவில் கண்டறிய வேண்டுமா? நேரில் காட்டுகிறேன். ஆனல் அதைத் தாங்கும் உரம் உன் நெஞ்சில் உண்டா?"

"எதையும் தாங்கும் இதயம் உண்டு எனக்கு" என்ருன் மாறன். ஆனல் அவன் அப்படிக் கூறியவுடனேயே நெஞ்சில் மீண்டும் அதே 'சுருக்' கென்ற உணர்ச்சி.

"அப்படியானல் புறப்படு என்னுடன்........." மாறனின் கையை இறுகப்பற்றினன் மணி. "எங்கே?........ இப்போதே போக வேண்டுமா" என்ற மாறனுக்கு "விஞக்கள் ஏன் விடைகாணும் வேளையில்? ஒரு வேளை உன் இதயம் அதைத் தாங்குமா" என்று......... நகைத்தான் மணி.

"வீண் வார்த்தைகள் ஏன். புறப்படுவோம்" என்று படபடப்புடன் மொழிந்தான் மாறன். கையுடன் கைகோர்த்து இருளைக் கிழித்துக்கொண்டு சென்றன இரு உருவங்கள்.

• • • •

கடைத்தெருவில் கரைகாணு மனிதத்திரள் அலைமோதிக்கொண்டிருந்த காலை நேரம். பசியால் நலிந்து பஞ்சடைந்த மேனி. காற்றடைத்த பையல்ல அவன் உடல். வாடி வதங்கிய அவன் மெய் எப்போது பொய்யாகிவிடுமோ என்றறியேன. கைநீட்டி இரக்கவும் சக்தியில்லை. சுழன்ற கண்கள் சொருக வீழ்ந்தான் மண்மீது. மனித அலைகள் ஒரு கணம் நின்றன. சில மனித உருவங்கள் "ஐயோ பாவம்" என்றன. பழுத்த சிவப்பழம் ஒன்று 'சிவ சிவ' என்று கூறிக்கொண்டு நகர்ந்தது. வயிறு நிறைந்த வேதாந்தி ஒன்று பானை வயிற்றைப் பரிவுடன் தடவிக்கொண்டு உருண்டு சென்றது. பேச்சளவில் பரிவும், கனிவும் நின்றுவிடுவதைக் கண்டுகொண்டே நின்றுகொண் டிருந்தனர் இருவர். இதயமணி விரைந்துசென்று வீழ்ந்துகிடந்தவனைத் தன் மடிமீது சாய்த்துக்கொண்டான். "செல்வ! சிறிது தண்ணீர் என்ருன்" மணிமாறன் ஓடிச்சென்று தண்ணீர் கொண்டு தெளித்ததும், அவன் கண்களைத் திறந்தான். "ஐயா பசி" கிட்டிய பற்களின் இடையிலிருந்து மெல்லக் கிளம்பின இரு வார்த்தைகள். இருவரும் தாங்கி அழைத்துச்சென்று அவனுக்கு உணவளித்தனர். இதயமணி கேட்டான், "நண்ப! ஏனிந்த நிலை உனக்கு?"

"நல்ல நிலையில் தானிருந்தேன், விதிவசத்தால்........." பசியாறியவன் பதில் தந்தான். "மதியை இழந்ததற்கு விதியைப் பழிப்பதால் பயன்? சரி நடந்ததை விட்டு நடப்பதைப் பார்ப்போம். உன் பெயர்?" என்ருன் மணி. "செல்வக் களஞ்சியம்........." மாறனும் மணியும் ஒருவரை ஒருவர் நோக்கினர். நான்கு கண்கள் நகைத்தன. சிறிது நேரத்தில் மூன்று உருவங்கள் அங்கிருந்து சென்றன.

அந்தி மயங்கும் நேரம், மக்கள் நடமாட்டம் நிறைந்த ஒரு சோலையோரம். கண்தெரியாத ஒரு கிழவன். அவன் பேத்தி என்று கூறுமளவில் ஒரு பெண் குழந்தை. இருவருக்குமிடையே உள்ள உறவை உறுதிப்படுத்துவது போன்ற ஒரு குறுந்தடி. இவ்விருவர் பின் இருவர் — மணியும் மாறனும் சென்றனர். "தாத்தா அந்த மண்பொம்மையை எனக்கு வாங்கித்தர மாட்டாயா" குழந்தையின் மழலை பேசிற்று. வெறும் மழலையல்ல. ஏக்கம் நிறைந்த மழலை. "கண்ணா! உனக்கு நான் வாங்கிக்கொடுக்காமல் வேறு யாருக்கம்மா செய்வேன். கையில் பணமில்லையே அதற்கு இரண்டணா வேணுமே" இது கிழவனின் மழலை. துன்பத்தின் குமுறல் இதுதானோ? "தாத்தா யார் கிட்டேயாவது கேட்டு வாங்கிக்கொடு தாத்தா" குழந்தையின் ஏக்கம் விம்மலாக வெளிவந்தது. "நமக்கு யாரம்மா இருக்கிறார்கள்? அனாதைகளாச்சே நாம். எங்கே யாரிடம் கேட்கமுடியும். கடவுளைத்தான் கேட்கணும்" கிழவன் துயரிலிருந்து பிறந்தது ஒரு பெருமூச்சு.

இதயமணி மாறனைத் தொட்டான். அவன் வாழ்க்கையிலே கண்டறியாத உணர்ச்சி ஒன்று... உள்ளத்தில் ஒரு நெகிழ்ச்சி. மனம் உருக நோக்கினான். இதயமணி முன் வந்தான். "தாத்தா என்ன அப்படிக் கூறிவிட்டாய்? நாங்கள் இல்லையா? எங்களைப்போல் எத்தனை பேர். இந்தா, இதை வாங்கிக்கொள். குழந்தைக்கு வேண்டியதை வாங்கிக்கொடு. மனதைத் தளர விடாதே, தாத்தா. வெள்ளி நாணயமொன்று கைமாறியது. இதயமணி பின் நகர்ந்து கிழவனின் முன் மாறனை நிறுத்தினான். முன் நின்ற மாறனின் கையைக் கிழவன் பிடித்துக் கொண்டான். இருவர் உள்ளத்திலும் உணர்ச்சி நிறைவு. "ஐயா! ஆண்டவன் உங்களைக் காப்பாற்ற வேணும். இந்த ஏழையின் நன்றி இதுதான்" அதிகம் கூறவில்லை அவன். ஆனாலும் ஒளியற்ற அவன் கண்களிலிருந்து கண்ணீர்த்துளிகள் அவன் பற்றியிருந்த மாறன் கைமீது விழுந்தன. நீர்மல்கும் கண்களுடன் மாறனும், மணியும் மற்ற இருவரும் அங்கிருந்து அகன்றனர்.

* * * *

உழவனும் மாடும் கலப்பையுடன் வீடுநோக்கிச் செல்லும் வேளை. பகல் மறைந்து இரவு தோன்றும் நேரம். ஊர் எல்லையில் ஒரு குடிசை. கணவனும், மனைவியும் ஒரு கலயமும். எலும்புகள் தோலையே கிழித்துக்கொண்டு வெளிவந்துவிடுமோ என ஐயுறத்தக்க, ஒட்டி உலர்ந்த உடல்கள். இருவர் முன்பும் ஒரே ஒரு மண்கலயம். வெளியிலே "ஐயா! ஐயா!" என்ற குரல். "என்னையும் ஐயா என்றழைக்க ஆளிருக்கிறார்கள் பார்த்தாயாடி" என்றது கணவன் குரல். "ஐயே, போங்க, பெரிய மனிசனுங்காட்டியும்"... மனைவியின் கனிவான கேலிச்சிரிப்பு. இதயமணியை நோக்கி மாறன் "துன்பத்திலும் இன்பம் இருக்கத்தான் செய்கிறது" என, மணி "இல்லறமே இன்பம்; ஆனால் வறியார் இல்லம் உலகின் துன்பம்" என்றான். குடிசைக்கதவு படபடவென பலவகை சப்தத்துடன் திறந்தது. "யாரய்யா?" என்றவன் மணி, மாறன் இருவரையும் கண்டதும் ஒதுங்கி, "சாமி! என்ன வேணும்" என்றான். "குடிக்கக்

கொஞ்சம் தண்ணீர் வேண்டும்" என்றான் மணி. அவனுக்குத் தன் காதுகளையே நம்பமுடியவில்லை. "என்ன சாமி? தண்ணியா வேணும்" என்றான். மணி மீண்டும் "ஆம்" என்றான். "ஏ புள்ளே இங்கே ஓடியா" "என்னாங்க" என்று வந்தவள் மற்றவர்களைக் கண்டதும் கந்தல் புடவையை இழுத்துக்கொண்டு கதவோரமாக நின்றாள். "ஏ புள்ளே இவுக என்னமோ கேக்குறாங்க, நீயே சொல்லு அவுகளுக்கு" பதட்டமடைந்ததுபோல் காணப்பட்டது அவன் குரல்.

"ஏஞ்சாமி யென்ன வேணும் உங்களுக்கு?"

"தாகமாயிருக்கிறது, தண்ணீர் வேண்டும்"

"என்ன சாமி எங்க வீட்டிலே நீங்க தண்ணி வாங்கிக் குடிக்கலாமுங்களா, இன்னும் அரை மைல் இப்படியே போனீங்களானா ஊருக்குள்ளே போவலாம். அங்கே தண்ணி கிடைக்கும்"

"உங்கள் வீட்டில் தண்ணீர் குடிக்கக் கூடாதென்று சட்டம் ஏதாவது" என்று மணி கூறுவதற்குள் "சாமி, சாமி அதெல்லாம் ஒண்ணுமில்லிங்க" உடனே அவள் குரல் கம்மியது. "நாங்க தீண்டப்படாதவங்க சக்கிலிய ஜாதிங்க". மீண்டும் மணி கூறினான் "அதனால் பரவாயில்லை. தண்ணீர் கொண்டுவா!! "வேண்டாஞ்சாமி" என்று கூறிக்கொண்டே அவள் கணவனை நோக்கினாள். "அது சொல்லுதே அது நிசந்தானுங்க" என்றான் அவன். "ஐயா, தாகத்துடன் வீடு தேடிவந்த ஆளை அனுப்பாதே" என்றான் மணி. இவ்வளவையும் பார்த்துக்கொண்டிருந்த மாறனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. கணவன் மெதுவாகத் தன் தலையை அசைத்தான். உள்ளே சென்றாள் அவள். சிறிதுநேரத்தில் பளபளவெனத் துலக்கப்பட்ட ஒரு குவளையில் நீருடன் வந்தாள். அதை வாங்கி மாறனிடம் நீட்டினான். மடமடவென அவன் அதைக் குடித்துவிட்டு மீண்டும் குவளையைத் திருப்பித்தந்தான். கணவனும் மனைவியும் விந்தை நோக்குடன் கண்டனர். தண்ணீரைக் குடித்தபிறகு மாறனும், மணியும் அக்குடிசையின் திண்ணையில் அமர்ந்தனர். உள்ளேயிருந்த மண்கலயத்தைக் கண்ட மணி "என்ன நீங்கள் இன்னும் சாப்பிடவில்லையா?" என்றான். "சாமி களைப்பாயிருக்கிறீக, நீங்களும் கொஞ்சம் சாப்பிடறீங்களா?" என்று தயங்கித் தயங்கிக் கேட்டான் அவன். "ஆகட்டும்" என்றதும் கலயம் வெளியே வந்தது. அதனுள்ளிருந்த களி நசுங்கி நெளிந்த ஒரு பித்தளைத் தட்டில் இறங்கியது. மணி மீண்டும் அதை மாறனிடம் நீட்ட அவன் ஓர் உருண்டையைக் கஷ்டப்பட்டு விழுங்கினான். அதன் பிறகு சென்ற உருண்டைகள் வேகமாக இறங்கின. மணியும், மாறனும் எழுந்து கைகளைக் கழுவினர். விடைபெற்றுக்கொண்டனர் இருவரிடமும். மகிழ்ச்சி நிறைந்த - மலர்ந்த முகங்களுடன் கணவனும், மனைவியும் கரம் கூப்பினர். மணி ஒருசிறு பையை அவளிடம் நீட்டினான். "வேண்டாமுங்க" என்றவள், மீண்டும் அவன் வற்புறுத்தவும் கணவன் "வாங்கிக்கோ புள்ளே" என்றான். மாறனும் மணியும் அங்கிருந்து அகன்றனர்.

* * * *

மீண்டும் சுவர்க்கோழிகளும் ஆந்தைகளும் இரவைச் சிதைத்துக் கொண்டிருந்த நேரம். முன்பு கண்ட அதே மாளிகையில் உள்ள அதே சிறு

அறை. மாறனும் மணியும் சாய்வு நாற்கலிகளில் அமர்ந்திருந்தனர். மாறனது முகம் வெளிறிப்போய் சோர்வுடன் காணப்பட்டது. ஆனால் அவன் கண்களில் ஓர் ஒளி. இதயமணியை நோக்கிக் கூறலானான்.

"நண்ப! துன்பத்தின் எல்லையை வெகுசீக்கிரம் காட்டிவிட்டாய். என் மனதிலே ஓர் அமைதி" இருமல் கடுமையாகத் தாக்கியது. கண்களில் நீர் தளும்பியது. குரல் கரகரத்தது. "இனி நான் என் செல்வத்தை என்ன செய்யவேண்டுமென்பதை அறிந்துகொண்டேன். கோவில், மடம், சத்திரம், சாவடி என்று நினைத்திருந்தேன். அதில் பயன் இல்லை என்பதை இப்போது தெரிந்துகொண்டேன். எனக்கு வழிகாட்டியாக வந்து என் அகக் கண்ணைத் திறந்துவிட்ட நீ" இருமல் மீண்டும் வாட்டியது. நாற்காலியிலிருந்து எழுந்த அவன் சாய்ந்து விடுவதற்குள் இதயமணி அவனைப் பிடித்துக்கொண்டான். "நண்ப, நான் யாரென்று கேட்கிறாயா?" அணைத்துக்கொண்டான் மாறன். ஆனால் அவன் பிடியிலிருந்தபடியே "நான் உன் இதயத்தில்தான் இருக்கிறேன். உன் இதயத்தின் ஒலி" — என்றான். மறுகணம் தன்பிடியில் ஒருவருமில்லாதிருப்பதை வியப்புடன் நோக்கி, நெஞ்சைப் பிடித்துக்கொண்டே மாறன் மேசையருகே சென்றான். எழுதினான்; எழுதிக்கொண்டே இருந்தான். "என்வேலை முடிந்துவிட்டது" முகத்தில் வியர்வை முத்து முத்தாக அரும்பிற்று. இருமல் உடலை உலுக்கியது. "என் இதயத்தில் இருந்த துன்பத்தின் முள் அகன்றுவிட்டது... இதயமணி" என்றான். அறையில் அமைதி. ஓரே அமைதி.

காலையில் கதவைத்திறந்த வேலைக்காரன் திடுக்கிட்டுப் பதறி ஓடி மருத்துவரை அழைத்துவந்தான். உடல் உயிரற்றுவிட்டது. வேலைக்காரனின் "ஐயோ, எசமான்" என்ற குரலைக்கேட்க மருத்துவர் அங்கு நிற்கவில்லை. மணிமாறனின் இறுதி ஆசை நிறைவேறிற்று. அவன் செல்வத்திலே "ஏழையர் இல்லம்" உருவாயிற்று. அவனுடைய துன்பத்தின் சிப்பியில் பிறந்ததல்லவா அந்த இன்ப முத்து!

கன்னியின் கலக்கம்

ப. சேதுராமன், புகுமுக வகுப்பு.

முகிற் கூட்டங்கள் சூழ்ந்து விளங்கும் குன்றினை அடுத்துள்ள ஒரு சிற்றூரில் வாழ்கின்றாள் மங்கைநல்லாள் ஒருத்தி. ஒரு நாள் மாலை சோலையில் மலர் கொய்துகொண்டிருந்தாள். அதுபோது இடி முழக்கம் ஒத்த பேரொலி கேட்க, ஒலியெழுந்த திக்கை நோக்கினாள். மலையொத்த மதங்கொண்ட களிறு பிளிறி வரக்கண்டாள்; திகைத்தாள்; மலர்களை வீசிவிட்டு ஓடத்தொடங்கினாள். மதங்கொண்ட களிறும் மங்கையைத் தொடர்ந்தது. அதனைக்கண்டு அச்சத்தால் அலறிய அணங்கின் கூக் குரல் கேட்டு அநங்கனை நிகர்த்த ஆடவன் ஒருவன் விரைந்துவந்து அந்தக் களிற்றினை வெருட்டி, அரிவையின் அச்சத்தை அகற்றினான்.

தன்னைப் பேரிடரிலிருந்து காப்பாற்றிய அவனை அவள் தனது நன்றியுணர்வு தோன்ற நோக்கினாள். அவனும் அந்த அழகின் உரு வத்தை நோக்கினான். அடுத்த நிமிடமே பெண்மையின் பிறப்பிடமாகிய அப்பேதை அவ்விடம் விட்டகன்றாள்.

மறுநாள் ஞாயிறு மறையும் வேளை, அச்சோலையினை அடைந்து, ஓர் சுனையின் அருகே அமர்ந்திருந்தாள் அம்மங்கை. தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவனை எண்ணிக்கொண்டிருந்தபோது, அவன் அவள் அமர்ந்திருந்த இடம் நோக்கி வர, நாணமும் அச்சமும் மேலிட எழுந்து நின்றாள்.

அவள் பார்வை சுனை நீரில் ஆரல் மீனின் வரவை நோக்கி அமர்ந் திருந்த நாரையின்மீது சென்றது. அப்போது அங்கு வந்த அவன் அவளருகிற் சென்று தன் காதல் எண்ணத்தை எடுத்தியம்பி, விரைவில் மணம் பேசுவதற்கு அவளது பெற்றோரிடத்துத் தன் பெற்றோரை அனுப்புவதாகக் கூறினான். அம்மங்கையும் அகமிக மகிழ்ந்தாள். அவனும் பிரிந்து சென்றான்.

நாட்கள் பல கழிந்தன; நங்கை நலிவுற்றாள்; அக்கள்வன் தன்னை வஞ்சித்தானோ என்றும் எண்ணினாள். அச்சம் அவளை ஆட்கொண்டது. அன்று தன்னை மணப்பதாகக் கூறிச் சென்றவன் இன்று மறுப்பானாயின் உற்ற சான்றுகள் இல்லையே எனக் கலங்கினாள். அன்று அவன் தன் னுடன் உறவாடியபோது ஆரல் மீனின் வரவை நோக்கியிருந்த அந்த

நாரையைத் தவிர வேறொரு சான்றும் இல்லாததை எண்ணி உள்ம் நைந்தாள். தான் அதுவரை மறைத்து வைத்திருந்த இவ்வுண்மையினைத் தன்னுயிரனைய தோழியிடம், நடந்தவை யனைத்தும் கூறி வருந்தினாள். இத்தகைய அரியதொரு காட்சியைக் குறுந்தொகை அழகுற எடுத்துக் காட்டுகிறது.

"யாரும் இல்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ!
தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகு முண்டுதான் மணந்த ஞான்றே."

(அரும்பதவுரை: குருகு-நாரை, ஆரல்-ஒருவகை மீன்)

குவியும் கமலம்



Pallavi N. I-B.A.,

"மொய்யுறு நறுமலர்
முகிழ்த்த வாம்சில !"—கம்பர்

உயிர் காத்த தமிழ்.

(நாடகம்)

கோ. சிவஞானம், P. U. C., N. L. T.

காட்சி 1

ஒலி:- தமிழ்!

இனிமையெனும் இன்பத் தமிழ்! தேனூறும் செந்தமிழ்! உலகு தோன்றிய காலத்தே தோன்றி, ஆதவனுடன் கூடி வளர்ந்த தமிழ்! வளங்கொழித்த தமிழ்! வாழ்வு தந்த தமிழ்! காலனது வாயிலிருந்து காளையர் பலரின் உயிர்காத்த தமிழ்! ஆம்! தமிழ் உயிர் காத்தது; உடல் காத்தது; தலை காத்தது! பல இடங்களில், பல நேரங்களில்! அக்காட்சிகளிலே இதோ ஒரு காட்சி.........

இடம்:- காவிரிப்பூம்பட்டினம், அரண்மனை.

உறுப்பினர்கள்:- நலங்கிள்ளி அமைச்சர், சேனாதிபதி. அறங்கூறும் அவையோர் கோவூர் கிழார், மற்றும் பல புலவர்கள்.

நிகழ்காலம்:- அவைகூடி, ஆவூர் பற்றிய சிக்கல்களை ஆய்தல்! பெருவீரனும், சிறந்த புலவனும், அரசனுமான நலங்கிள்ளி வருதல். அவையினர் எழுந்து நிற்றல்.

நலங்கிள்ளி:- அமர்க! அமர்க! அமைச்சரே அமர்க! அறங்கூறும் அவையினரே அமருங்கள். அன்புத்தமிழ் அறிஞர்களே, இன்பத் தமிழ் இளவல்களே அமர்க! அமர்க!

அமைச்சர்:- மங்காப்புகழ் படைத்த மன்னவா! மறவீரன் பரம்பரையே! தமிழ்ப் பெருமகனாரே! எங்கள் மன்னவா, வணக்கம்!

நல:- நன்றி! புலவர்கள் உளரோ!

அமை:- உள்ளனர் வேந்தே! (புலவர்களைக் காட்டுதல்)

நல:- வருக! புலவர் பெருமக்களே வருக! வணக்கம்!

புலவர்கள்:- வணக்கம் வேந்தே!

நல:- வருக! புலவர் மணிகளே! தாங்கள் எந்தப் பொருள் வேண்டுமானாலும் கேளுங்கள். தருகிறேன்! தவறு; தவறு. இது உங்கள் இல்லம். இவையெல்லாம் உங்கள் உடைமைகள்! இவர்கள் எல்லாம் உங்கள் ஏவலர்கள்! விரும்பியதை எடுத்துக் கொள்ளுங்கள்! வேண்டியவர்களை அழைத்துக் கொள்ளுங்கள்! ஆனால் ஒன்று! நீங்கள் செல்வதற்குமுன் ஒரு பாடல், ஆம். தாய்த்தமிழில், என் உளம் இனிக்க ஒரு பாட்டுப் பாடுங்கள்! உம்... ஆகட்டும். முன்னால் அமர்ந்திருப்பவர்........., முதுகண்ணன் சாத்தனார்தானே உறையூர் வாசியல்லவா, நீங்கள் பாடுங்கள்! நெடுங்கிள்ளி என் பகைவனானாலும், என் தமிழ்த்தாயின் மற்றொரு புதல்வன் தானே! அங்குத் தமிழ்த்தாயின் நிலை யாது என யாம் நோக்குவோம்! உம், பாடுங்கள்.

[உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாடுகின்றார்.]

புலவர்:-

செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளிதிரி தருதிசையும்
வறிது நிலைஇய காயமும் என்றிவை
சென்றளந் தறிந்தோர்போல என்றும்
இனைத்து என்போரும் உளரே அனைத்தும்
அறிவுஅறி வாகாச் செறிவினை யாகிக்
களிறு கவுள்அடுத்த எறிதல் போல
ஒளித்த துப்பினை ஆதலின் வெளிப்பட
யாங்ஙனம் பாடுவர் புலவர் கூம்பொடு
மீசைப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது
புகாஅர்ப் புகுந்த பெருங்கலந் தகாஅர்
இடைப்புலப் பெருவழிச் சொரியும்
கடல்பல் தாரத்த நாடு கிழவோயே. —(புறம் 30)

நல:- ஆகா! அருமை! அருமை! செஞ்ஞாயிற்றின் செலவும், அஞ்ஞாயிற்றின் இயக்கமும், இயக்கத்தால் சூழப்படும் மண்டிலமும், காற்றுச் செல்லும் திசையும், ஊன்றின்றி நிற்கும் வானமும், இன்னோரன்ன பிறவற்றிற்குச் சென்று அளந்து அறிந்தவர்போல், அவைகளின் தன்மையை விளக்கக்கூடிய அறிஞர் புலவரே! இதனைப்புகழ வார்த்தைகள் எனக்குத் தெரியவில்லையே! அறிஞர் என்பதற்கு இலக்கணம் தந்தது அருமை! அருமை! அவைகட்குமுன், எனக்கு முன்பிறந்து, இயற்றமிழில் சிறப்புப்பெற்ற என் தமிழ்ப்புலவர் அண்ணு நீங்கள் அறிஞர்தான்! அண்ணு நீங்கள் விரும்பும் எதையும் கேளுங்கள். யார் அங்கே? எடுத்துவா பரிசுகளை, (புலவர்களை நோக்கி) அடுத்து உள்ளவர் ஆ! கோவூர் கிழார் அவர்களா? வருக! வருக! பொன்னித் திருநாட்டில் கன்னித்தமிழ் இசைத்து என் சென்னியில் பாய்ச்சுங்கள்! பெரியவரே. மண்ணெல்லாம் பொன்னுகும் இக்கன்னித் தமிழகத்தில் என்ன இல்லை? இன்னும் சில கோவூர் கிழார்கள்தான் இல்லை. இருப்பவர் ஒருவர்தானே! அவருடைய புலமைத் திறனையும் சுவைக்கவிருக்கும் வாய்ப்பினை நான் இழக்க விரும்பவில்லை. புலவர் மணியே! தமிழ்ப்பெரியாரே, தந்தையே துவக்குங்கள்! எங்களிடம் ஒரு சொல் கூறிவிட்டுத் துவக்குங்கள்! அதுதான் நல்லது!

கோவூர் கிழார்: (பாடுகின்றார்)

"சிறப்புடை மரபில் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம்போல
இருகுடை பின்பட ஓங்கிய ஒருகுடை
உருகெழு மதியின் நிவந்து சேண்விளங்க
நல்லிசை வேட்டம் வேண்டி வெல்போர்ப்
பாசறை யல்லது நீயொல் வாயே;
நுதிமுகம் மழுங்க மண்டி ஒன்னார்
கடிமதில் பாயுநின் களிறு அடங்கலவே;
போரெனில் புகலும் புனைகழல் மறவர்

காடிடைக் கிடந்த நாடு நனிசேஎய
செல்வேம் அல்லேம் என்னார்; கல்லென்
விடிவுடை ஆங்கண் வேற்றுப் புலத்து இறுத்துக்
குணகடல் பின்னதாகக் குடகடல்
வெண்தலைப் புணரியின் மான்குளம்பு அலைப்ப
வலம்முறை வருதலும் உண்டென்று அலம்வந்து
நெஞ்சநடுங்கு அவலம் பாயத்
துஞ்சாக் கண்ண வடபுலத்து அரசே." —(புறம் 31)

நல:- நன்று! நன்று! வஞ்சனை செய்யும் வடநாட்டார் அஞ்சுகின்றனரா? நடுங்கட்டும்! "போர்" என்றால் "யாம்" என்று எழும் ஏறுகள் என் மறவர். தொலைநாடு ஆயிற்றே, அங்கு யாம் வாரோம்" என்றும் சொல்லா என் வீரர்கள்! உண்மை! உண்மை! நான் வேற்றுநாட்டு விழாவிலே கலந்துகொண்டு, கீழ்க்கடல் பின்னுக, மேற்கடல் அலைகள் என் குதிரைக் குளம்புகளை மோத இந்நாட்டை நான் வருதல்கண்டு வடக்கு அஞ்சுகின்றது போலும்! குற்றம் இருப்பின் பகுத்தறிவு அவர்களை வாட்டத்தான் செய்யும். ஆகா! அதனை இன்னுமொரு முறை சொல்லிச் சுவைக்கலாம்.

"..................அலம்வந்து
நெஞ்சநடுங்கு அவலம் பாயத்
துஞ்சாக் கண்ண வடபுலத்து அரசே"

உள்ளத்து உணர்வுகளைத் தெள்ளத்தெளிய, நல்லமுறையில் காட்டும் என் தெள்ளுதமிழ்ப் பெரியோரே எதுவேண்டுமானாலும் கேளுங்கள். என் செல்வம் யாவற்றையும் கொடுக்கட்டுமா? இல்லத்தையே கொடுக்கட்டுமா? எது வேண்டும்? கூறுங்கள். யார் அங்கே! எடுத்துவா என் கருவூலச்சாவியையே! (புலவர்கள் பக்கம் திரும்பி) அடுத்து உள்ளவர் பாடுங்கள். எல்லோரும் பாடுங்கள்!

[வேறொரு புலவர் பாடுகின்றார். அடுத்து வேறு ஒருவர் பாடுதல். ஒருவர்பின் ஒருவராக யாவரும் பாடிமுடித்தல். எல்லோரும் பரிசுபெற்று பட்டினியாய்க் கிடக்கும் தத்தம் குடும்பத்தைக்காண விரைகின்றனர்.]

நலங்கிள்ளி:- என்ன, அமைச்சரே? ஆவூரிலிருந்து செய்தி ஏதேனும் உண்டா? நெடுங்கிள்ளி யாது காரணம் காட்டுகின்றான்? ஒற்றர்கள் வந்தனரா? தூதுவரை அனுப்பட்டுமா?

அமைச்சர்:- வேந்தே! நெடுங்கிள்ளி சிறிதும் பணிந்து வரவில்லை. மாறாக ஆவூர் கோட்டையைப் பலப்படுத்தத் துவங்கி விட்டார். படையெடுக்கத் தக்க தருணம் இதுதான். தூதுவரை தாறுமாறான மொழிகளில் பேசலுற்றாராம். இதற்கெல்லாம் முடிவு..........? ஆம்! போர்க்களத்தில் அண்மையில் கிடைக்கும்.

நல:- பொறுமை! பொறுமை அறிஞர்களே! சான்றோரே! வணக்கம்! அமைச்சர், இதுகாறும் கூறியவற்றை நீங்கள் கேட்டிருப்பீர்கள். நீங்கள் அறிவீர்கள்- நெடுங்கிள்ளி எனது தாய்வழி உறவினன் என்பதை. இடையில் தோன்றிய

மனவேறுபாட்டின் காரணமாக, நானும் அவனும் பகைமை பூண்டோம். அதுமுதல் அவன்வதியும் உறையூருக்கும், நாம்வதியும் காவிரிப்பூம்பட்டினத்திற்கும் தொடர்பு அற்றுவிட்டது. நிற்க. "ஆவூர்" எங்களுக்குப் பொதுவாக உரியது. ஆனால், அதனைத் தவறான வழியில் தனதாக்கிக் கொண்டுவிட்டான் அவன். அதுமட்டுமல்ல! நம் தூதுவர்களையும் தவறாக நடத்தியிருக்கின்றான். மேலும், ஆவூர் கோட்டையைப் பலப்படுத்துவதில் முனைந்துள்ளானும். இது அவனுடைய போர்வெறியைக் காட்டுகின்றது. என்குதிரையின் காலடிகண்டு - என்காலடி அல்ல - அஞ்சும் வடபுலத்தினர்மீது வாஞ்சையுடனுள்ளானும். இன்னபிற காரணங்களுக்குச் சரியான ஒரு முடிவைக் காண நான் பெரிதும் விழைகின்றேன். அதற்குத்தகுந்த இடம் செறுமுனைதான்! இறுதியில் என்காலடியில் அவன் வீழ்ந்து, மன்னிப்புக்கொண்டு, சமாதானமாகும் நிலைக்கு அவனைக்கொண்டுவருவேன். இது உறுதி! என் உள்ளமெல்லாம் ரத்த வெள்ளமாக ஓடி, நெஞ்சத்தில் ஊஞ்சலாடி, இரத்தத்துடன், உடலுடன் கலந்து, என்மூச்சின் வாய் வெளிப்படுகின்ற என் தாய்த் தமிழின்மீது ஆணையிடுகின்றேன். நினைவிலிருக்கட்டும் நண்பர்களே! இன்று தூதுவர் செல்கின்றனர். பதில் நல்லதாக இருப்பின், நாமும் நல்லவர்கள்! இல்லையேல்? வருகின்ற முப்பதாம் நாள் செறுக்களம் நோக்கிச் செல்வோம். இது உறுதி. (படைத்தலைவரைப் பார்த்து) "என்ன படைத்தலைவரே என் முடிவு சரிதானு?

படைத்தலைவர்:- தவறு! மன்னு தவறு! என் வீரவாளுக்கு, என் வீரர்களின் தினவெடுத்த தோள்களுக்கு இன்றே, உடனே வேலைதராதது தவறு? இப்பொழுதே அனுமதி கொடுப்பின்...............

நல:- படைத்தலைவரே! எனக்குச் சிந்திக்கும் தன்மையில்லையா? நான் எல்லாவற்றையும் எண்ணிப் பார்த்துதான் இந்த முடிவுக்கு வந்துள்ளேன்.

(அமைச்சரிடம்) அமைச்சரே உடனே விரைவாக ஆவூருக்குத் தூது அனுப்புங்கள். (படைத்தலைவரிடம்) பதறுதீர் நண்பரே! நெடுங்கிள்ளியை எனக்குத் தெரியும். அவனது மனப்பான்மையும் தெரியும்! திண்ணமாகப் போர் நடைபெறும்.

(அவை கலைகின்றது)

காட்சி 2

உட்பிரிவு காட்சி (அ)

இடம்:- காவிரிப்பூம்பட்டினம்.

காலம்:- சரியாக 30 நாட்கள் சென்று.

பாத்திரங்கள்:- நலங்கிள்ளி, படைத்தலைவன், படைவீரர்கள்.

[நலங்கிள்ளியின் தூதுவனிடம் தவறான முறையில் நெடுங்கிள்ளி நடந்து கொண்டமையாலும், ஆவூர் கோட்டையைக் கைப்பற்றியது பற்றி, தக்க காரணங்கள் காட்டாமையாலும், ஆவூர்மீது படையெடுப்பது எனத்தீர்மானித்து, சரியாக 30-நாட்கள் கடந்தவுடன் படை கிளம்புகின்றது. அதற்கு முன்பாக வீரர்களுக்குப் "பெருஞ் சோற்றுநிலை" எனும் விருந்து நடைபெறுகிறது. விருந்து முடிந்தவுடன், எல்லோரும் ஆவூருக்குக் கிளம்புகின்றனர். வீரர்கள், "வெற்றிவேல்; வீரவேல்"

"நலங்கிள்ளி வாழ்க" "தமிழ் வாழ்க" என்பன போன்ற ஒலிகளை எழுப்பிச் செல்கின்றனர்]

உட்பிரிவு காட்சி (ஆ)

காலம்:- படை புறப்பட்டுச் சின்னாட்கள் சென்றன.

இடம்:- ஆவூரை அடுத்த காவல்காடு, முற்பகல்.

பாத்திரங்கள்:- படைவீரர்கள், நலங்கிள்ளியின் ஆட்கள், மற்றும் நெடுங்கிள்ளியின் ஒற்றர்கள்

[படைகள் ஆவூரை நெருங்குகின்றன. நகருக்கு வெளிப்புறம் (புறநகரில்) காவல்காடு அமைத்துள்ளது. அதனை, நலங்கிள்ளியின் ஆட்கள் பாழ் படுத்துகின்றனர். மரங்களுக்குத் தீயிடப்படுகின்றது. இதைக்கண்ட நெடுங்கிள்ளியின் ஒற்றர்கள் நெடுங்கிள்ளியிடம் செய்தியைச் சொல்ல ஓடுகின்றனர். நலங்கிள்ளியின் ஆட்கள் அழிப்பு வேலையைத் தொடர்ந்து நடத்துகின்றனர். படையின் முன்னோடிகள் அவர்களை ஊக்குவிப்பதால் ஏற்படும் ஓதை அதிகமாக உள்ளது.]

உட்பிரிவு காட்சி (இ)

இடம்:- ஆவூர் கோட்டை.

காலம்:- பிற்பகல்.

பாத்திரங்கள்:- கோவூர் கிழார், நெடுங்கிள்ளியின் ஒற்றர்கள்.

[போர்பற்றிய செய்திகளை அறியாத புலவர் கோவூர் கிழார் நெடுங்கிள்ளியிடம் செல்கின்றார். அகழிமீது இட்டுள்ள பாலத்தில் நடந்து முகப்புவாயிலை அடைகின்றார். நெடுங்கிள்ளி, கொடிமரத்திலிருந்துகொண்டு புறக்காட்டில் நடப்பவைகளை அறிந்துகொண்டு மதில்களை அடைக்க ஆணையிடுகின்றான். மதிலை அடைக்கும் வேகத்தில் கோவூர் கிழார் வழிமாறிச் செல்கின்றார். கோட்டை அடைக்கப்பட்டுள்ளது. சிறிது நேரங்கழித்து. நலங்கிள்ளியின் படை வருகின்றது. கோட்டை அடைபட்டுள்ளது. கோட்டையைச் சுற்றி முற்றுகையிடும்படி நலங்கிள்ளி தன் படைவீரர்களுக்கு ஆணையிடுகின்றான். கோட்டை முற்றுகையிடப்படுகின்றது தொடர்ந்து பல நாட்கள்]

காட்சி 3:

இடம்;- ஆவூர்.

காலம்:- சில நாட்கள் கழிந்தபின்

பாத்திரங்கள்:- நெடுங்கிள்ளி, கோவூர் கிழார். ஒற்றர்கள், காவலர்கள், வீரர்கள்.

[நாட்கள் பல கழிந்தன. அடைபட்ட கோட்டை அடைக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து முற்றுகையும் நடைபெற்றுக்கொண்டிருந்தது. முடிவு? ஆவூருக்கும் வெளியுலகிற்கும் தொடர்பு அற்றொழிந்தது. நெடுங்கிள்ளி வீரவாழ்வு இழந்தான். மன்னன் என்ற நிலைமைக்கும் அருகதையற்றவனானான். மக்களின் துயர்போக்கித் தண்ணளி செய்யும் தலையாய கடன்பெற்ற மன்னன், தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்குச் சிங்கத் தமிழர்களையும், தங்கத் தரணியையும் கைவிடுத்துக், கோட்டைக்குள் மறைந்துகொண்டு கோட்டையை மூடிவிட்டான்.

ஆவூர் நகரை அடைந்த அல்லல்கள் அளவிலடங்கா. வாழ்வதற்குத் தேவையான பொருள்கள் பலவும் கிடைக்காமல் மக்கள் வாடுவாராயினர். குழவிகட்குப் பாலில்லை. மகளிர்க்குப்பூ இல்லை. மன்னனின் யானைகள் பசி மிகுந்தமையாலும், உணவின்றி வாடிமையாலும் ஓ! ஓ! வென ஓலமிட்டு, அவைகளைப் பிணைத்திருந்த கம்பங்களைப் பெயர்த்துக்கொண்டு, நிலத்திற்புரண்டு இடியேறுபோல் பிளிறுகின்றன. இதயத்தைப் பிளந்தெடுக்கும் இந்நிகழ்ச்சிகளைப் புலவர். கோவூர் கிழார் கண்டார். அவரது இளகிய தமிழ் நெஞ்சம் - தமிழ்ப்புலவர் நெஞ்சம் - செயலாற்றத் துவங்கியது. நெடுங்கிள்ளியைக்காண புலவர் விரைந்தார்.

[நெடுங்கிள்ளி இருக்கையில் அமர்ந்துள்ளான். புலவர் வருகின்றார்]

நெடுங்கிள்ளி:-- வருக! வருக!! தமிழ்ப்புலவர்மணியே! வருக! வணக்கம்.

கோவூர் கிழார்:-- நன்று! நெடுங்கிள்ளி, நலம் பெருகட்டும். (அமைதி)

நெடு:-- தமிழ்ப் பெரியோரே! கண்டீர்களா என் நிலை? கேட்டீர்களா என வாழ்வை? ஐயகோ கவியரசே...........

கோவூ:-- நெடுங்கிள்ளி உன்னைப் புவியரசே என்றழைக்க என் நா கூசுகின்றது! மக்களின் துயர்போக்கித் தண்ணளி செய்யும் தலையாய கடன்பெற்ற மன்னனைப் பிறந்து வாழவேண்டிய நீ............... நின்னை மன்னனென்பதா? வெட்கம்! வெட்கம்! மன்னர் பரம்பரைக்கே அவமானம்.

நெடு:-- புலவர்மணியே! யாது கூறுகின்றீர்கள்? நான் மன்னனது கடமையிலிருந்து தவறினேனா? பொய்! இதுபோன்ற தவறான செய்திகளை யாரேனும் கூறியிருப்பின்...............

கோவூ:-- கொற்றவனைக் குறைகூறுவதா என அஞ்சும் கோழைகள் கூட்டமல்ல, வேந்தே நான்! குற்றம் களைவதே அறிவுடையான் தொழில் எனும் அறவழியைப் பின்தொடரும் ஆற்றல் கொண்டவன் நான். வேந்தே! பார் இங்கே, உன் சுய நினைவுடன், உன் சூழ்நிலையைப்பார். பார் மன்னா! பார்! பசிமிகுந்த யானைகள் உணவு பெறாது, கட்டிய கம்பம் வருத்தச்சாய்ந்து, நிலத்திற்புரண்டு இடியேறு போலப் பிளிறுவதைப்பார்! பாலில்லாமல் குழந்தைகள் அழுவதையும், பூவில்லாது வெறுந்தலைமுடிக்கும் மகளிரைப் -- பத்தினிப்பெண்டிரைப்பார். நற்பண்புகள் வாய்ந்த ஆன்றோர்வதியும் நல்லவீடுகளில்கூட அவர்கள் குடிநீர் இன்றி வருந்திக்கதறும் காட்சியைப்பார். இவையெல்லாம் கேட்டும் நாணங் கொள்ளாது இங்கு இனிதாக நீ இருப்பது மிகவும் தவறு! வீரமும், வலிமையும் மிக்க குதிரைப் படையைக்கொண்ட வேந்தே! நீ அறநெறியினை விரும்பின் "நீயும் சோழர்குடியினன், நினக்கு இதைத்தந்தேன்: பெற்றுக்கொள்க!" எனக் கூறி, ஆவூரை நலங்கிள்ளிக்குக் கொடுத்து, அறநெறியாளன் எனப்பெயர் பெறுக அல்லது, "யான் வீரனல்லனோ" என்ற பெருமித உணர்வு உன் நெஞ்சகத்தில் இருப்பின், மதிற்கதவைத் திறந்துவிட்டு, "வெற்றி அன்றேல் தோல்வி" என நினைந்து போரில் ஈடுபடு. இவ்விரண்டையும் செய்யாமல், மதிற்கதவுகளை அடைத்துக்கொண்டு உள்ளேயிருத்தல் வெட்கக்கேடு ஆகும்.

நெடு:- ஆம்! உண்மைதான்! நான் தவறிவிட்டேன். உண்மை. புலவரே நான் செய்ததவறுகளை உணர்ந்தேன். இனித் திருந்திவிடுவேன். ஐயா, என்னை மன்னித்தேன் என்று கூறுங்கள். என்னை மன்னியுங்கள். இன்றே நான் உறையூர் செல்லுகின்றேன், ஆவூர் கோட்டை அவனிடம் இருக்கட்டும்! இது உறுதி. யார் அங்கே? பயணத்திற்கு ஆவன செய்யுங்கள். புலவரே, நாம் ஏற்பாடுகளை மேற்பார்வையிடச் செல்வோமா? (செல்கின்றனர்)

[நெடுங்கிள்ளி உறையூருக்குச் சென்றுவிடுகின்றான். ஆவூரை நலங்கிள்ளி அடைகின்றான்.]

காட்சி 4.

உட்பிரிவுக் காட்சி (அ)

இடம்:- உறையூர், அரணுக்கு அருகிலுள்ள ஒருவீதி.

காலம்.- நெடுங்கிள்ளி உறையூர் சேர்ந்து சின்னாள் கழித்து ஒருநாள்.

பாத்திரங்கள்;- இளந்தத்தன் எனும் ஓர் இளம்புலவர்பெருமான், நகர்க்காவலர்கள்.
[காவலர் வீதிவழியே வருகின்றனர்.]

முதல் காவலன்:- ஏன் எழிலா? நம்மைப் பெற்றதாயை அம்மா என அழைப்ப தற்கும், வேலைக்காரியே என்று அழைப்பதற்கும் ஒற்றுமையுண்டா எழிலா?

இரண்டாம் காவலன்:- சேச்சே! இந்த வினவை எழுப்புவதற்கே உனக்கு வெட்கமாக இல்லை.

மு. கா:- உண்மைதான் தம்பி! அதுசரி, அப்படி அழைப்பவர்களை என்ன செய்யலாம்? எழிலா!

இ. கா:- அண்ணே அதுபோன்று அழைக்கும், அழைக்க விரும்பும், துரோகிகளின் நாவிலே சூடிட்டு ஆறாத புண் ஒன்றை உண்டாக்கி, அவன் உணவருந்தவும் முடியாத நிலையை உண்டாக்க வேண்டும்.

மு. கா:- அப்படியானால் இந்த நாட்டின் புதல்வர்கள்தானே நாம். நம் தாயாம் இந்நாட்டை வேறுபெயரிட்டு அழைப்பவர்களை...........

இ. கா;- சரியண்ணே! நீ எங்கோ செல்கின்றாய். அதோ பார் அண்ணே! யாரோ ஒருவன் இந்த நடுயாமத்தில் இங்குவருகின்றவன் யார்? (இளந்தத்தன் வருகை)

மு. கா:- யாரப்பா நீ? எந்தநாடு?

இளந்தத்தன்:- இச்சோழநாடுதான் என் தாய்த்திருநாடு. நான் ஒரு தமிழ்ப்புலவன். அரசனிடம் பாடிப் பரிசில்பெற நான் விரும்பினேன். என் வயிற்றுப்பசியோ, இப்பொழுதே செல்...... செல் என்று கூறியது. உடனே வந்துவிட்டேன்.

மு. கா;- நீ இச்சோழநாடுதானா? அப்படியானால் நீ எந்த ஊர்வாசி?

இள:- என் சொந்த ஊர் காவிரிப்பூம்பட்டினம்.

இ. கா·- ஆ! அப்படியா? அப்படியானால் அண்ணே, 'எனக்குச் சந்தேகமாகவுள்ளது எதற்கும் இன்றிரவு இவரை இங்கு வைத்திருந்து நாளைக்காலை அரசனிடம் அழைத்துச் செல்வோம்.

மு. கா·- சரி தம்பி, வா ஐயா செல்வோம்.

இள:- ஐயா, ஐயா, ஐயோ! தமிழ்ப்புலவர்கட்கு உறையூரில் கிடைக்கும் பரிசு இதுதானோ? (இளந்தத்தனை இழுத்துச் செல்லல்)

உட்பிரிவுக் காட்சி (ஆ)

இடம்:- உறையூர், அரசவை.

காலம்:- மறுநாட்காலை.

பாத்திரங்கள்:- நெடுங்கிள்ளி, கோவூர் கிழார், இளந்தத்தன், இரவு வந்த இரு காவலர்கள், மற்றும் அறங்கூறும் அவையினர்.

[அரசவை நடந்துகொண்டிருக்கின்றது. பலதரப்பட்ட பொருள்களைப்பற்றி பேசுகின்றனர். பலவழக்குகளில் நீதி வழங்கப்படுகின்றது. இளந்தத்தனை நெடுங்கிள்ளிமுன் நிறுத்தி இரவு அவரைக் கைதுசெய்த காவலன் வழக்கை எடுத்துக் கூறுகின்றான்]

காவலன்:- நீதி தவறாத, நேர்மை தவறாத எம் மன்னரே வணக்கம். இக்கைதிமீது உள்ள வழக்கினைக் கூறுகின்றேன். நேற்று இரவு நடுயாமத்தில் நானும், எழிலனும நகர்க்காவல் புரிந்தோம. அப்பொழுது இராசவீதி வழியே அரண்மனை நோக்கி இவர் வந்துகொண்டிருந்தார். நாங்கள் அவரை நிறுத்தி, கேட்ட கேள்விகளுக்கு அவர் தந்த பதில்களிலிருந்து அவர்மீது சந்தேகம் கொண்டு நாங்கள் கைதுசெய்தோம். இவர் பெயர் இளந்தத்தனார், ஒரு தமிழ்ப்புலவராம்: நம் புரவலனிடம் பாடிப்பரிசில் பெறுவதற்கு இரவில் அவர் வந்தது எங்களுக்கு சந்தேகத்தைக் கொடுத்தது. அடுத்து அவர் ஊரினைக் கேட்டமைக்கு "காவிரிப்பூம்பட்டினம்" எனப் பதிலிறுத்தார். உடன் நாங்கள் ஒற்றரெனச் சந்தேகித்துக் கைது செய்தோம். இவ்வழக்கை விசாரித்து நல்லதீர்ப்பு வழங்குமாறு மேன்மைதங்கிய மன்னர்பிரானை பணிந்து கேட்டுக்கொள்கின்றோம்.

இரண்டாவது காவலன்:- அவர்கள் கூறியதும் அனைத்தும் உண்மையே. இவ்வழக்கில் நல்லதீர்ப்பு வழங்கக் கேட்டுக்கொள்கிறோம்.

நெடுங்கிள்ளி:- ஒற்றர்களுக்கு இந்நாட்டில் இடமில்லை. அதுவும் நாம் நலங்கிள்ளியுடன் போர்தொடுக்க முயன்று திரும்பிவந்து நம் ஊரில் இருக்கும்பொழுதே இங்குவந்து நிலையைக்கண்டுக்கொண்டு அவன் நம்மீது போர்தொடுக்க உதவும் மற்றுமுள்ள ஒற்றர்களுக்கும் இதுபாடமாக இருக்கட்டும். ஒற்றர்களிடம் வழக்கு விசாரணை தேவையின்மையால் இவனுக்கு நான் மரணதண்டனை விதிக்கின்றேன்.

இளந்தத்தன்:- ஐயோ! தமிழ்ப்புலவனை நம்பாதோர் தமிழ் அரசராமே! என் குடும்பம் இனி என் செய்யும்? மன்னா?

நெடு:- யார் அங்கே? இவனை இழுத்துச் செல்லுங்கள். நாளை காலை கொலைசெய்யப் படுதல் வேண்டும். (கோவூர் கிழார் வருகை)

கோவூர் கிழார்:- கூடாது! இவரை எனக்குத் தெரியும். இளந்தத்தனார் என்பவர் தான் இவர். பரிசில் கேட்கவந்த புலவனுக்குப் புரவலன் தரும் பரிசு மரணமா? கூடாது. இவர் ஒற்றரல்லர்.

நெடு:— புலவரானால் நடுயாமத்தில் அவர் நாட்டுக்கும் எமக்கும் பகையுள்ளபொழுது இங்கு ஏன் வரவேண்டும்? புலவரே!

கோவூர் கிழார்:— (பேசி நிகழ்ச்சிகளை விவரிப்பதைக்காட்டிலும் பாடிவிவரிப்பது சிறந்தது எனப்பாடுகின்றார்.)

"வள்ளியோர்ப் படர்ந்து புள்ளின்போகி
நெடிய என்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பாது உண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந்தன்றோ இன்றே திறப்பட
நண்ணார் நாண அண்ணாந்து ஏகி
ஆங்கு இனிதொழுகின் அல்லது ஓங்குபுகழ்
மண்ணாள் செல்வமெய்திய
நும்மோ ரன்ன செம்மலும் உடைத்தே. (புறம் 47)

ஒருவர்:— உண்மைதான்! பழமரம் நாடிச்செல்லும் பறவையினைப்போல் பரிசில் பெறப் புலவர்கள் செல்வார்களேத்தவிர என்றுமே பிறர்க்குத் தீமைசெய்ய நினையாத ஒன்று.

வேறொருவர்:— ஆம்! உண்மைதான்.

நெடு:— உண்மை! உண்மை! நான் உணர்ந்தேன் பொருளை. ஆதலின் என்னை மன்னியுங்கள். இளந்தத்தனார் விடுதலை செய்யப்பட்டார். அவருக்குப் பரிசில் கொடுங்கள். இளந்தத்தனாரே என்னை மன்னியுங்கள்.

இள:— தவறு! தவறு! எம்மை நீவிர் மன்னியுங்கள்.

நெடு:— என்னே தமிழ்ப்புலமை! என்னே தமிழ் நெஞ்சம்! தமிழ், தமிழ் தமிழேதான். அன்று ஆயிரமாயிரம் படைவீரர்களின் தலையை உயிரைக் காலனிடமிருந்து, ஆவூரில் தமிழ் காத்தது. இன்று ஒரு புலவரை என்னிடமிருந்து காப்பாற்றியது. "நெடுங்கிள்ளி, ஒரு தமிழ்ப் புலவனைக் கொன்ற கொடுங்கள்ளி" என்று மக்கள் கூறுவண்ணம் என் பெயரைக் காத்தது! இன்னும் எத்தனை பெயரைக் காப்பாற்றுமோ? தமிழ் வாழ்க! வாழ்க தமிழ்!!

காட்சி 5.

காலம்:— சிலநாள் கழிந்து ஒருநாள்.

இடம்:— உறையூர் அரணின் ஒரு பக்கம்.

பாத்திரங்கள்:— நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, கோவூர் கிழார், இளந்தத்தன், படை, வீரர்கள்.

[உறையூர் வந்தடைந்த நெடுங்கிள்ளி மீது மீண்டும் நலங்கிள்ளி போர்த் தொடுத்தான். மதில் அடைபட்டுள்ளது. மதிலின் ஒரு புறத்தில் நலங்கிள்ளியின் படையும், வேறொரு பக்கத்தில் நெடுங்கிள்ளியின் படையும் உள்ளன! இரு படையினரும் போருக்கு ஆயத்தமாகி விட்டனர். அதனைக் கண்ட கோவூர் கிழார் மதில் மீது ஏறிநின்று, இரு படையினரையும் விளித்துப் பேசுகின்றார். அமைதி.]

"தங்கத்தமிழ் நாட்டுப் புகழுடைச் சோழன் வழிவந்த நலங்கிள்ளியே, நெடுங்கிள்ளியே, படையினரே ஒரு சொல் கேளுங்கள்! வேந்தர்களே! "நின்னைப் பகைத்துள்ளவன் பனைமாலையணிந்த சேரனுமல்லன். வேம்பணிந்த செழியனுமல்லன். நீ அணிந்துள்ளது ஆத்திமாலை, அவனும் அணிந்ததும் அதுவே. அவனும், நீங்கள் பிறப்பில் சோழர்கள். ஆதலின் உம்முள் எவர் தோற்பினும், உலகம் சோழன் தோற்றான் என்றே கூறும். போரில் இருவரும் வெற்றி பெறுதல் இயலாது. நீங்கள் போர்புரிந்தால், நிச்சயம் யாரேனும் ஒருவர் தோல்வியுறுவீர்கள். ஆனால் "சோழன் தோற்றான்" என்றே யாரும் கூறுவர். அதனால் நும் குடிப்பெருமை கெடும். ஆதலின் நீவீர் போரினை நிறுத்துதலே சாலச்சிறந்தது".

[என்று தெளிவாகக் கூறியதைக் கேட்ட இருவரும் போரினை விலக்கி, நண்பர்களானார்கள்.

இளந்தத்தன்:– இதோ, இம்முறையும் பல்லாயிரம் பேர்களின் உயிரைக் காத்தது தமிழ். இன்னும் எத்துணை உயிரை அது காப்பாற்றுமோ? தமிழ் வாழ்க! வாழ்க தமிழ்!!

[திரை]

॥ श्रीः ॥

किमुन्मत्ताः कवयः ?

R. Rangarajan, IV cl. i-b/s

वाल्मीकिप्रभृतीनां महाकवीनां वर्णविन्यासान् पश्यतां रसिकानाम्, अतिसंकटमम्बरतलम् ; लिखतां पदजालानि, अविस्तीर्णं महीमण्डलम् ; गणयतामर्थगुणान्, अल्पीयसी संख्या। चिदानन्दघने शाश्वते वागात्मनि ब्रह्मणि मोदमाना महाकवय उन्मत्ता इति केचन मृत्पिण्डबुद्धयः प्रजल्पन्ति। एवं कया वाण्या कथ्येत ? कतरेण प्रकारेण निरूप्येत ? कतमेन प्रमाणेन निर्धार्येत ?

युक्तायुक्तविचारणविमूढा अबद्धासंबद्धप्रलापिन उन्मत्ता नाम। न ते स्वयं बुद्धाः ; न चापि बोधकाः। कविपुङ्गवास्तु भुवनतलमखिलमपि प्रातिभेन चक्षुषा, इदमिति, इत्थमिति च पश्यन्ति ; दर्शयन्ति चास्माकम्। अत एव तेषां बोधनशक्तिरन्यादृशी।

यथा काष्ठं च काष्ठं च समेयातां महोदधौ।
समेत्य च व्यपेयातां तद्वद्भूतसमागमः ॥

इति कविप्रथमपद्धत्यामात्मकृतौ कथं कान्तासंमिततया लोकयात्रास्वरूपं प्रबोधितवान् कविकोकिलो वल्मीकजन्मा, यो मधुमयभणितीनां मार्गदर्शी महर्षिः। परमकारुणिकाः शंकराचार्यवर्याः

"मूढ जहीहि धनागमतृष्णां कुरु सद्बुद्धिं मनसि वितृष्णाम्।
यल्लभसे निजकर्मोपात्तं वित्तं तेन विनोदय चित्तम् ॥"

इति संतुष्टिं शिक्षयन्ति।

कविकुलतिलकः कालिदासो महदिदं निरूपयति तत्वं वसिष्ठवचनात् :—

"मरणं प्रकृतिः शरीरिणां विकृतिर्जीवितमुच्यते बुधैः।
क्षणमप्यवतिष्ठते श्वसन् यदि जन्तुर्ननु लाभवानसौ ॥"

दैव्या वाचः संस्कृतादन्यत्र च दृष्टिं पातयामः।

कविचक्रवर्तीति श्लाघ्यमानः कम्बः हनूमद्वचनात्कथं त्रिवर्गसारं धर्मम् अस्माकमुपादेयतया प्रशंसतीति पश्यामः —

"பொருளும் காமமும் என்றிவை போக்கிவே
றிருளுண் டாமென வெண்ண லரீதலு
மருளுங் காதலிற் றீர்தலு மல்லதோர்
தெருளு ண்டாமென வெண்ணலர் சீரியோர்"

कबीरमहाकवेः कर्णामृतायमानं सुभाषितं शृणुत । कथं सोऽस्मान् प्रेमपथे प्रवर्तयतीति च निबोधत ।

"पोथी पढि पढि जग मुवा पण्डित भया न कोई ।
एकै आखर प्रेमका पढै सो पण्डित होई ।"

इति प्रथितयशसः तामस् ग्रे (Thomas Gray) इत्याख्यस्य आङ्ग्लकवेरैहिकविभवानित्यत्वनिरूपणं कियत्स्फुटं वर्तत इति ।

अन्यच्च ; लोकज्ञानशून्याः खलून्मत्ताः । कवयितॄणां ज्ञानं कथं वोत्कृष्टमिति निरूपयामि —

"कामं स्वभावो यो यस्य न शक्यः परिमार्जितुम् ।"
"शोकश्च किल कालेन गच्छता ह्यपगच्छति ।"

इति शब्दब्रह्मणि प्रबुद्धो वाल्मीकिः ॥

"अशोच्या हि पितुः कन्या सद्भर्तृप्रतिपादिता ।"
"रिक्तः सर्वो भवति हि लघुः ; पूर्णता गौरवाय ।"

इति कविवतंसः कालिदासः ॥

"शोकक्षोभे च हृदयं प्रलापैरेव धार्यते ।"
